பொதுசன நூலகம்
மாநகராட்சி மன்று
11 - 7 - 1994
யாழ்ப்பாணம்

Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை ரூபா 5·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | ஆனி 27 | 11- 07 - 94 | திங்கட்கிழமை | ஓசை 143

## இருதய அறுவைச் சிகிச்சைக்கு பதில் எளிய நவீன வைத்திய முறை

இருதயக் கோளாறுக்கு அறுவைச் சிகிச்சை செய்வதற்குப் பதிலாக எளிய நவீன மருத்துவ முறையொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இருதயத்திற்கு இரத்தத்தை எடுத்துச் செல்லும் குழாய்களில் அடைப்பு ஏற்பட்டால் இதயத்தின் செயற்பாடு பாதிக்கப்படுகிறது இதை சரிசெய்யாவிட்டால் பல கடுமையான விளைவுகள் ஏற்படும். இந்தக் கோளாறைச் சரிசெய்யப் பயன்படும் இருதய மாற்றுச் சிகிச்சைக்கு அதிக செலவும் மிகுந்த சிரமமும் ஏற்படுவதால் பலரும் இதனை விரும்புவதில்லை. இப்பொழுது இருதயக் கோளாறை சரிசெய்ய எளிதான மாற்று வழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஒரு புதிய முறைக்கு உடல் முழுவதும் (5ஆம் பக்கம் பார்க்க)

## க. பொ. த. உயர்தரபரீட்சை திட்டமிட்டபடி நடைபெறும்

(கொழும்பு)

க. பொ. த. உயர்தரப் பரீட்சையை இந்த வருடத்தில் இரண்டு கட்டங்களில் நடத்துவது என முன்னர் எடுத்த தீர்மானத்தில் எதுவித மாற்றமும் இல்லை என்று பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

மேற்படி பரீட்சையின் முதலாவது கட்டம் வரும் முதலாம் திகதியிலிருந்து 11-ம் திகதிவரையும் நடைபெறும் இரண்டாவது கட்டம் ஆகஸ்ட் 22-ம் திகதியில் இருந்து செப்டம்பர் முதலாம் திகதி வரை நடைபெறவுள்ளது.

நடைபெறவுள்ள தேர்தலை ஒட்டி இப்பரீட்சையைப் பின் போடுமாறு பலர் கோரிக்கை விடுத்திருந்ததை தொடர்ந்து அதுபற்றிய முடிவு இவ்வார இறுதிக்குள் வெளியிடப்படும் ( 5ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி கரையோரப் பகுதியில் விமானக்குண்டு வீச்சு தாக்குதல்

### கரையில் இருந்த பல படகுகள் சேதம

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு கரைக் குடத்தனை பொற்பத்தை பகுதியில் குண்டு வீச்சு விமானங்கள் நடாத்திய குண்டு வீச்சு தாக்குதலில் கரைப் பகுதியில் கட்டிவிடப்பட்டிருந்த படகுகள், வள்ளங்கள் சேதமடைந்தன.

இச் சம்பவம் நேற்றுக் காலை 6. 40 மணியளவில் நடைபெற்றது. இப் பகுதிக்கு வந்த இரண்டு பொம்பர் விமானங்கள் பல தடவைகள் வடமராட்சி கிழக்குப் பகுதிகளை வட்டமிட்டு நோட்டமிட்டு கரைக்குடத்தனை பொற்பத்தையில் குண்டுகளை வீசியது.

இரண்டு பொம்பர் விமானங்கள் மாறி மாறி நான்கு குண்டுகளை வீசியதில் வள்ளங்கள், படகுகள் சேதமடை (5ஆம் பக்கம் பார்க்க)

## இன்று நண்பகலுடன் வேட்புமனு தாக்கல் முடிவு

(கொழும்பு)

எதிர்வரும் ஆகஸ்ட் 16-ம் திகதி நடைபெறவுள்ள தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் இன்று நண்பகல்வரை ஏற்றுக்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிவரை 14 மாவட்டங்களில் 19 குழுக்கள் வேட்பாளர் நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்துள்ளன. இவற்றுள் ஏழு சுயேட்சைக் குழுக்கள் ஆகும்.

இலங்கையில் நடைபெறும் 10 வது பாராளுமன்ற தேர்தல் இதுவாகும். 196 அங்கத்தவர்கள் இதில் தேர்ந்தெடுக்கப்படவுள்ளனர். இதற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுவது இன்று நண்பகல் 12 மணியுடன் முடிவடையும். 12 மணி முதல் 1.30 வரை ஆட்சேபனைக (5ஆம் பக்கம் பார்க்க)

## —இனப்பிரச்சினை; மனித உரிமை விவகாரம்—

# சிறிலங்கா அரசாங்கத்தின் கொள்கைக்கு ஐரோப்பிய பாராளுமன்றம் கண்டனம்

(கொழும்பு)

**சிறிலங்கா அரசு இனப்பிரச்சினை மற்றும் மனித உரிமை விவகாரங்களில் கடைப்பிடிக்கும் கொள்கைகள் தொடர்பாக கண்டனம் தெரிவித்து ஐரோப்பிய பாராளுமன்றம் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.**

ஐரோப்பிய பாராளுமன்றத்தின், குழு சார்பாக சிறப்பு உத்தியோகத்தர் ஒருவர் சமர்ப்பித்த இரு அறிக்கைகளை மையமாகக் கொண்டு

வேற்றப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

ஐ.நா.மனித உரிமை ஆணைக்குழு, சர்வதேசமன்னிப்புச் சபை, ஆகியன வெளி

உள்ள சிபார்சுகளை சிறிலங்கா அரசு அமுல்படுத்த வேண்டும். பத்திரிகைச் சுதந்திரம் உறுதி செய்யப்பட

கள் ஆணைக் குழு நிறுவப்பட வேண்டும் என்பன நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் இலவதாகும்

## நான்கு மீனவர் கைது

மட்டக்களப்பு மதுரங்குளம் பகுதியில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த நான்கு மீனவர்கள் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

(5ஆம் பக்கம் பார்க்க)

## ஜெர்மனி தோல்வி

உலக கிண்ணத்திற்கான கால் இறுதி ஆட்டத்தில் முன்னாள் உலக சம்பியனான ஜெர்மனி பல்கேரியாவிடம் தோல்வி கண்டது. பல்கேரியா 2—1 என்ற ரீதியில் ஜெர்மனியைத் தோற்கடித்தது.

## புலிகளுடன் பேச்சுக்கள் நடத்த நிபந்தனை விதிக்கப்போவதில்லை

### சிறிலங்கா சுதந்திரக் கட்சி தெரிவிப்பு

தீர்மானப ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

ஐரோப்பிய பாராளுமன்றத்தின், குழு சார்பாக சிறப்பு உத்தியோகத்தர் ஒருவர் சமர்ப்பித்த இரு அறிக்கைகளை மையமாகக் கொண்டு இத் தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

ஐ.நா.மனித உரிமை ஆணைக்குழு, சர்வதேசமன்னிப்புச் சபை, ஆகியன வெளியிட்டுள்ள அறிக்கைகளில் உள்ள சிபார்சுகளை சிறிலங்கா அரசு அமுல்படுத்த வேண்டும். பத்திரிகைச் சுதந்திரம் உறுதி செய்யப்பட வேண்டும். மனித உரிமைகள் ஆணைக் குழு நிறுவப்பட வேண்டும் என்பன நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் சிலவாகும்.

# சேமமடுவில் படையினர்பதுங்கி தாக்கு மூவர் பலியாகியிருக்கலாம்என அச்சம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா இராணுவம் ஓமந்தை சேமமடு பகுதியில் மறைந்திருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் குடும்பஸ்தர் ஒருவர் காயமடைந்தார். மேலும் மூவர் காணாமல் போயுள்ளனர்.

சேமமடு கிராமத்திற்கு தெற்கு பக்கமாக உள்ள காட்டுப் பகுதியில் பதுங்கியிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் திடீரென்று துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இது இடம் பெற்றது.

நேற்று முன்தினம் மாலை 3.30 மணியளவில் காட்டுப் பகுதி சென்று வீடு அமைப்பதற்குரிய காட்டுத் தடிகள் வெட்டிவிட்டு, தனித் தனி சைக்கிள்களில் வந்து கொண்டிருந்த நான்கு தமிழ்க் குடும்பஸ்தர்களைநோக்கியே இரா

(5ஆம் பக்கம் பார்க்க)

## இராஜினாமா

பி. பி. ஸியின் தென்னாசிய செய்தியாளர் மார்க்டலி தமது பதவியை இராஜினாமா செய்துள்ளார். தம மீதும் தமது பணி மீதும் பி. பி. ஸி. நிறுவனம் அழுத்தங்

(6ஆம் பக்கம் பார்க்க)

# நிபந்தனை விதிக்கப்போவதில்லை

## சிறிலங்கா சுதந்திரக் கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

புலிகள் ஆயுதங்களை கீழே வைக்க வேண்டுமென்றோ தலைவர் பிரபாகரன் பேச்சுக்களில் கலந்து கொள்ள வேண்டுமென்றோ தாம் நிபந்தனைகளை விதிக்கப் போவதில்லை என சிறிலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துளது.

தாம் ஆட்சிக்கு வந்தால் புலிகளுடன் நிபந்தனையற்ற பேச்சு நடத்தப் போவதாககம் அதிகாரப் பரவலாக்லை மேலும் விரிவு படுத்தப் போவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாகாணங்களுக்கு கூடுதலான அதிகாரங்களை வழங்குவதன் மூலமும், மாகாண எல்லைகளை மீள வரைவதன் மூலமும் சிக்கலான வடக்கு கிழக்குப் பிரச்சினைக்கு தீர் வைக்காண்பதற்குரிய சூழலை உருவாக்க முடியும் எனவும் சுதந்திரக் கட்சியினர் தெரிவிக்கின்றனர்.

# துப்பாக்கி சூட்டுக்குமத்தியில் தவழ்ந்து உயிர் தப்பினேன்

## தப்பிவந்தவர் தகவல்

(வவுனியா)

கையில் இரத்தம் வழிந்தோட சரமாரியான துப்பாக்கி வேட்டுக்களுக்கும் மத்தியில் தவழ்ந்து தவழ்ந்து வந்து உயிர் தப்பிக் கொண்டேன்.

இவ்வாறுநேற்று முன்தினம் சேமமடுக் காட்டுப்பகுதியில் தடிகள் வெட்டிக்கொண்டு திரும்புகையில் இராணுவத்தினரின் துப்பாக்கிப் பிரயோகத்தின் போது காயமடைந்த பேதுறு செல்வநாயகம் தெரிவித்தார்.

நடைபெற்ற சம்பவம் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

காட்டில் தடிகளை வீட்டுத் தேவைக்கு வெட்டி விட்டு தனித்தனிச் சைக்கிள்களில கட்டிக்கொண்டு நானும் மற்றைய மூவரும் வந்து கொண்டிருந்தோம்.

திடீர் என்றுதுப்பாக்கிப்பிர

(5ஆம் பக்கம் பார்க்க)

# வவுனியா மோதலில் இரு போராளிகள் வீரச்சாவு

(வவுனியா)

வன்னி மாவட்டம், வவுனியாவில் நேற்று முன்தினம் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே எதிர்பாராத மோதலொன்று இடம் பெற்றது.

இம்மோதலின் போது இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேதவிபரம்தெரியவரவில்லை.

இம் மோதலில் இரண்டு

(5ஆம் பக்கம் பார்க்க)



கப்டன் எழில்வாணன்



லெப். தேவன்

# வெற்றிகரமான கெரில்லாக்களில் புலிகள் இயக்கமும் ஒன்று

## பி.பி.ஸி. செய்தியாளர் ஜோர்ஜ் ஆர்னி

(லண்டன்)

தமிழீழ விடுதலைப்புலிகள் உலகிலேயே மிக வெற்றிகரமாக இயங்கும் கெரில்லாக் குழுக்களில் ஒன்று ஆகும். அண்மைய ஆண்டுகளில் தென்னாசிய அரசியல் அரங்கில் அவர்கள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளனர். தற்கொடைப் போராளிகள் அணி, பெண்கள்அணி. கடற்படை அணி எனப் பல்வேறு அணிகளையும் கொண்ட இவர்களைப்பற்றி அறிய வெளிநாட்டு பத்திரிகையாளர் அவாவுறுகின்றனர் இவ்வாறு பி. பி ஸியின் கொழும்பு முகவரான ஜோர்ஜ் ஆர்னி கூறியுள்ளார்.

அண்மையில் யாழ்ப்பாணப் பயணம் மேற்கொண்ட இவர் தமது அனுபவம் பற்றி மேலும் குறிப்பிடுகையில், தமது பயணத்தை சுலபமானதாக்குவது அரசின் நோக்கமாக இருக்கவில்லை என்பது ஆரம்பத்திலேயே தெரிந்து கொண்டேன் பலமான அதிகாரவர்க்க அலைக்கழிப்பின் பின்னரே யாழ்ப்பாணம் செல்ல முடிந்தது என்றார்.

பலமான வாக்குவாதத்திற்குப்பின் இந்த முறைமட்டுமே யாழ்ப்பாணப் பயணத்திற்கு அனுமதி வழங்குவதாக சிறிலங்காவின் செய்தித் துறை அதிகாரி ஜோர்ஜ் ஆர்னிக்கு தெரிவித்தார்.

# விளக்கு அணைந்த போது வெடிச்சத்தம் கேட்டது

ரயிலில் எரிந்து கொண்டிருந்த விளக்குகள் மின்சாரம் நின்று அணைந்த போது திடீரென வெடிச் சத்தம் கேட்டது. உணர்ந்து கொள்ளும் முன்னரே பிரயாணிகள் எல்லோரும் ரயிலிலிருந்து வெளியே பாய்ந்தனர்.

இவ்வாறு நேற்று முன்தினம் அதிகாலை அநுராதபுரம் ரயில் நிலையத்தில் நடந்த குண்டு வெடிப்பில் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் இராஜேஸ்வரி [உடுப்பிட்டி] என்பவர் தெரிவித்தார்.

இச் சம்பவம் குறித்து அவர் விபரிக்கையில் வெள்ளி இரவு 10. 40 மணியளவில் கோட்டையிலிருந்து புறப்பட்ட ரயிலில் ஏறினேன். நிறைந்த சனமாக இருந்ததால் வாசல்

(5ஆம் பக்கம் பார்க்க)

# புகையிரதத்திற்கு வெளியேயிருந்தே கைக்குண்டு வீசப்பட்டது

(கொழும்பு)

அநுராதபுரத்தில் கடந்த சனியன்று அதிகாலை ரயிலில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு சம்பவத்தின்போது குண்டு ரயிலுக்கு வெளியேயிருந்து வீசப்பட்டதாக இந்த ரயிலில் வந்த பயணிகள் பலரும் கூறியுள்ளனர்.

கடந்த வெள்ளியன்று இரவு கொழும்பு கோட்டையிலிருந்து வவுனியா நோக்கிப் புறப்பட்ட இப் புகையிரதம் அநுராதபுரம் புகையிரத நிலையத்தில் தரித்து விட்டு அதிகாலை 4.19 மணியளவில் புறப்பட்டபோதே இக் குண்டு வெடிப்பு இடம்பெற்றது.

குண்டு வெடிப்பு இடம் பெற்ற சமயம் புகையிரதத்தில் இருந்த பயணிகளில் பெரும்பாலானோர் தமிழர்கள் ஆவர்.

இப் பயணிகள் மேலும் கூறுகையில், என்ஜின் பக்கமாக இருந்து மூன்றாவதாகப் பொருத்தப்பட்டிருந்த மூன்றாம் வகுப்பு பெட்டியிலேயே குண்டு வெடித்ததாக கூறினர்.

இதேவேளை அநுராதபுரம் ரயில் நிலையத்தில் ரயில் தரித்து நின்ற சமயம் மூன்றாம் வகுப்பு உறங்கலிருக்கைப் பெட்டியில் வெளியார் ஒருவர் பயணப் பையை வைக்க முயன்றபோது தடுக்கப்பட்டதாகவும்,அச்சமயம் அவர் ஓடி மறைந்ததாகவும் கூறப்படுகின்றது.

மேலும், உறங்கலிருக்கைப் பெட்டிகளின் ஜன்னல்களுக்கு ஊடாக நீலநிறப் பொலித்தீன் பைகள் எறியப்பட்டதாகவும் தெரிய வருகிறது.

(5ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தேவை

புரியாணி வகைகள் மற்றும் நூடில்ஸ், சுவீற்ஸ் வகைகள் தயாரிப்பதில் அனுபவமுள்ளவர்கள் நேரில் வரவும். சம்பளம் திறமைக்கேற்ப வழங்கப்படும். ஹொட்டல் றொலெக்ஸ், 340 ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம், (8719)

### அக்கரைச்சீமையில்' நாவல்

யாழ்ப்பாண நூலகத்தை சிங்களக் காடையர் எரித்த கதையை வாசியுங்கள். இலங்கையிலும் இங்கிலாந்திலும், நடக்கும் கதை 250 நாடகங்கள் எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை சுவையாகச் சொல்லுகின்றார். பூபாலசிங்கம் புத்தகசாலை. (8669)

### உரையரங்கு

பால கதிர்காம ஆலய வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு தினமும் நடைபெற்று வரும் தெய்வீக சொற்பொழிவில் இன்று கம்பவாரிதி த. சிவகுமாரன் ''முக்திக்கொரு வித்து'' என்னும் பொருளில் உரை நிகழ்த்துவார் இவ் உரையரங்கு பிற்பகல் 7. 30 மணியளவில் நல்லூர் சட்டநாதர் ஆலய பின் வீதியிலுள்ள பால கதிர்காம ஆலயத்தில் நடைபெறும்.

### நிதி ஒதுக்கீடு

(கொழும்புத்துறை)

சாவகச்சேரி பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பல வீதிகளின் திருத்த வேலைக்கென ஏழு இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. (24)

### 20 பேருக்கு கண் சிகிச்சை

(தென்மராட்சி)

கண் பார்வைகுறைந்தோர் மேலும் 20 பேருக்கு சாவகச்சேரி மருத்துவ மனையில் கண் சிகிச்சை கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றுள்ளது.

தென்மராட்சிப் பகுதியில் கண் பார்வை குறைந்தோருக்கு அண்மைக் காலமாக சாவகச்சேரி லயன் சழகத்தினர் சாவகச்சேரி மருத்துவ மனையில் கண் பரிசோதனை செய்து இலவச கண்


பருத்தித்துறை முனை மண் பெற்றெடுத்த மாவீரர் நினைவாக

சென். தோமஸ் விளையாட்டுக் கழகம் நடாத்தும்

## 44-வது ஆண்டு விளையாட்டு விழா

கழகங்களுக்கு இடையேயான போட்டிகள் விபரம்:

(அ) கபாடிச் சுற்றுப் போட்டி
1வது பிரிவு 55 கிலோவுக்கு மேல்
2-வது பிரிவு 55 கிலோவுக்கு கீழ்

(ஆ) 10மைல் மரதன்

(இ) 3 மைல் நீச்சல்

(ஈ) கட்டுமரம் வலித்தல்
1-வது பிரிவு இரண்டு பேர் கொண்ட மூங்கில் சவுள் (7 முழம் 4 கட்டி)
2-வது பிரிவு இரண்டு பேர் கொண்ட வலிபலகை (7 முழம் 4 கட்டி)

(உ) தலையணைச் சண்டை(கடலில்)

(ஊ) கயிறு இழுத்தல்
(1) ஆண் (2) பெண்

(எ) குத்துச் சண்டை

(ஏ) மல்யுத்தம்

(ஐ) கம்பு இழுத்தல்

இடம்:- முனை கலட்டி றோ. க.ஆ. பாடசாலை
காலம்:- 22, 23, 24-07 1994
விண்ணப்ப முடிவு திகதி 15.07-1994

இறுதி நாளன்று கழக வீரர்களின் வீரதீரச் செயல்களும் கலை நிகழ்வுகளும் இடம் பெறும்.

இப்போட்டிகள் சம்பந்தமாக தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

செயலாளர்
சென். தோமஸ்
சனசமூக நிலையம்,
முனை, பருத்தித்துறை.

(சி-9792)



பிந்திய செய்தி!

ஜோ. எகட்டனின்

## ஜெசித்தாரா

வழங்கும் முதன்மைச் சேவைகள்

உங்களுக்குத் தேவையான உணவுப் பொட்டலங்களை உங்கள்எண்ணத்துக்கேற்பவும். பணத்திற்கேற்பவும் வடிவமைத்துத் தருவோம். நீங்கள் இதுவென்று குறிப்பிடுங்கள் நாங்கள் முடித்து வைப்போம். அத்துடன் மட்டுமல்லாமல் வெளி நாட்டில் பயிற்சி பெற்ற சமையல் நிபுணர்களின் ஆலோசனைக்கேற்ப மேலைத்தேய, கீழைத்தேய உணவு வகைகள், சிற்றுண்டி வகைகள் மற்றும் உங்கள் மங்கள நிகழ்வுகள் கொண்டாட்டங்கள், விழாக்கள் பிரியாவிடை உபசாரங்கள் மற்றும் நிகழ்வுகளுக்கு இலவச மண்டப வசதியுடன் உணவு பரிமாறு சேவை மற்றும் பல விடயங்களுக்கு எமது முகாமையாளரைச் சந்தியுங்கள்

ஜோ. எகட்டனின்


## நினைவு கூருகின்றோம்...

### 11.07.1994....

1986-ம் ஆண்டு இதேதினத்தில் பருத்தித்துறையில் சிறிலங்காப்படையினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய,

**தோமஸ்** (தர்மலிங்கம் ரதீஸ்வரன்-கச்சேரி, நல்லூர் வீதி-யாழ்)

தமிழீழக் கடற்பரப்பில் பயணம் செய்து கொண்டிருக்கையில் சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட விமானக்குண்டு வீச்சில் வீரச்சாவெய்திய,

★ **நியாஸ்** (- - மன்னார்)

1987-ம் ஆண்டு மன்னாரில்-தள்ளாடி முகாம் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 02 தமிழர்கள்.

வல்வெட்டித்துறை - நெடியகாட்டுப்பிள்ளையார் கோவில் அருகில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத்தாக்குதலில் கொல்லப்பட்ட கணவன், மனைவி, 3வயதுக்குழந்தை ஆகிய 03 தமிழர்கள். வல்வை-வேராவில் பிள்ளையார் கோவில் அருகில் சிறிலங்கா ராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழர்கள்.

1990-ம் ஆண்டு முல்லைத்தீவு-கொக்காவில் பகுதியில் சிறிலங்கா இராணுவ முகாம் தகர்ப்பின் 2-ம் நாள் சமரின் போது வீரச்சாவெய்திய,

**கப்டன் சுகுமார்** (- - குச்சவெளி-திருமலை)

**2-ம் லெப்.குமாரி** (இரட்ணாம்பாள் கணபதி-காட்டுக்குளம், திரியாய்-திருமலை)

**வினோத்** (காசிநாதபிள்ளை மனோகரன் - தென்னமரவடி-திருமலை)

**கப்டன் பாபு** (சூசை உதயகுமார்-அச்சங்குளம், நானாட்டான்-மன்னார்)

**லெப். ஜெயா** (மணியம் ரவி-பண்டாரிக்குளம்-வவுனியா)

**லெப்.நிலான்** (நாகலிங்கம் மகேஸ்வரன்-156, வட்டக்கச்சி-கிளிநொச்சி)

**2-ம் லெப்.பிரியங்கா** (குமுதினி விஸ்வநாதன்-நெடியகாடு-வல்வெட்டித்துறை)

**நவம்** (அந்தோனிப்பிள்ளை புவனேஸ்வரன்-வீடமைப்புத்திட்டம், நாவற்குழி-கைதடி)

வடமராட்சி கிழக்கு மாமுனையில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வாகனவிபத்தில் எமைப்பிரிந்த,

**ஆழ்வார்** (மரியாம்பிள்ளை யோகராசா-செம்பியன்பற்று, மாமுனை-யாழ்)

ஆனையிறவு-குறிஞ்சாத்தீவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரின் போது வீரச்சாவெய்திய,

**குணா-கருணா** (நடராசாராஜகுபேந்திரன் இராமநாதபுரம், வட்டக்கச்சி-கிளிநொச்சி)

இதேதினம் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட குண்டுவீச்சில் கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமகன்.

மட்டு-வாகரைப் பகுதியில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட விமானக்குண்டுவீச்சில் கொல்லப்பட்ட 02 குழந்தைகள், 02 பெண்கள் உட்பட ஆறுதமிழர்கள்

தமிழீழக் கடற்பரப்பில் பயணம்செய்து கொண்டிருக்கையில் சிறிலங்காக் கடற்படையினரால் படகுடன் மூழ்கடித்துக் கொல்லப்பட்ட பெண் குழந்தை உட்பட 21 தமிழர்கள்.

1991-ம் ஆண்டு ஆனையிறவு சிறிலங்கா இராணுவ முகாம் தகர்ப்பு முயற்சியாக மேற்கொள்ளப்பட்ட ஆகாய, கடல் வெளி நடவடிக்கையில் தடைமுகாம் மீதான தாக்குதலின் போது வீரச்சாவெய்திய,

**கப்டன் தினேஷ்** (செல்லத்தம்பி சிறிதரன்-பிரதான வீதி, முறக்கொட்டாஞ்சேனை-மட்டு)

**லெப்.பட்டேல்** (அழகையா சாந்தகுணம்-குருக்கள் மடம், களுவாஞ்சிக்குடி-மட்டு)

**அந்தோனி** (தம்பிப்பிள்ளை சிவகுமார்-காயங்கேணி, மாங்கேணி மட்டு)

**குருபவன்** (சாமிநாதன் சாந்தகுமார்-6-ம் படிவம், இராமநாதபுரம்-கிளிநொச்சி)

**வனஜா** (ஜானகி சங்கர்-மன்னம்பிட்டி-பொலநறுவை)

**கப்டன் அமுதினி** (சிவமதி சிவசுப்பிரமணியம்-உரும்பராய் கிழக்கு-யாழ்)

**கப்டன் கஸ்தூரி** (வசந்தி கணேசன்-ஊரெழு கிழக்கு, சுன்னாகம்-யாழ்)

**கப்டன் வானதி** (பத்மசோதி சண்முகநாதபிள்ளை-3-ம் வட்டாரம், நயினாதீவு-யாழ்)

**கப்டன் லீமா** (கௌரி இராஜேந்திரம்-அம்மன் கோயிலடி, துன்னாலை வடக்கு-கரவெட்டி)

**லெப்.நிரோ** (உதயகுமாரி வல்லிபுரம்-வங்களாஒழுங்கை, புளியந்தோட்டம்-மல்லாகம்)

**லெப். அர்ச்சுன்** (சந்திரசேகரம் சுரேஸ்குமார்-சங்கத்தானை, சாவகச்சேரி - யாழ்)

**லெப். அர்ச்சுன்** (பத்திநாதன் தர்சன் -23, கண்டி வீதி, சுண்டுக்குளி - யாழ்)

உடுப்பிட்டிப் பிரதேசப் பொறுப்பாளர்,

**லெப். மைக்கல்** (ஆழ்வான் விநாயகமூர்த்தி - சரஸ்வதி வித்தியாலய வீதி, நெல்லியடி-கரவெட்டி)

**லெப். குணேஸ்** (சின்னத்தம்பி சங்கர் - கெருடாவில் வடக்கு, தொண்டமனாறு - யாழ்)

**2-ம்லெப்.ஜனகா** (சுகந்தி செந்தில்வேல்- வினோத் வீதி, மட்டுவில்வடக்கு, சாவகச்சேரி - யாழ்)

**2-ம்லெப். பைரவி** (திருமகள் கணேசமூர்த்தி-அளவெட்டி - யாழ்)

**2-ம்லெப்.ஜீவன்** (நடராசா சிவபாலன் - அம்மன் கோயிலடி, கோண்டாவில் - யாழ்)

**2-ம்லெப்.சோழன்** (சுப்பிரமணியம் இராஸ்தரன் - மாசார் - பளை)

**2-ம்லெப்.யோகன்** (தனபாலசிங்கம் மகேஸ்வரன் - அல்வாய் வடக்கு - பருத்தித்துறை)

**2-ம்லெப்.கிருபா** (நீலப்பிள்ளை கதிர்காமநாதன் - நாவற்காடு, வரணி - யாழ்)

**2-ம்லெப்.வாசு** (தேசிங்கம் தமிழ்ச்செல்வன்-பழைய விநாயகர் கோயிலடி - உடுப்பிட்டி)

**லெப். லக்ஷ்மன்** (தவானந்தவேல் குகதீஸ்வரன் - தெணியம்பை - வல்வெட்டித்துறை)

**ஜீவா** (சசிலதா தனபாலசிங்கம் - மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி - யாழ்)

**மங்கை** (மனோன்மணி செல்வராசா-கச்சேரி, நல்லூர் வீதி, யாழ்)

**யசோ** (சுஜிதா சிவஞானம் - செட்டியவூர், தொண்டமனாறு - யாழ்)

**கோமதி** (சுடரொளி கனகலிங்கம் - அராலி தெற்கு, வட்டுக்கோட்டை - யாழ்)

**குட்டியா** (சாந்தநாயகி விஸ்வலிங்கம் - மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி - யாழ்)

**கலைவாணி** (நிர்மலாபாலசுந்தரம்-கச்சாய்வீதி சாவகச்சேரி - யாழ்)

**துளசி** (இரஞ்சிதமலர் ஐயாத்தம்பி-குடமியன், வரணி கொடிகாமம் - யாழ்)

**மரிஸ்ரலா** (கொலின்கலிஸ்ராமரியாம்பிள்ளை-முள்ளியான், வெற்றிலைக்கேணி - யாழ்)

**செல்வா** (பொன்னன் நடராசா - வரணி வடக்கு, கொடிகாமம் - யாழ்)

**ரட்ணா** (கந்தையா விக்கினேஸ்வரன் - இயற்றாலை, வரணி. கொடிகாமம் - யாழ்)

**சரத்பாபு** (நவரத்தினம் கோபிநாத் - கல்லூரி ஒழுங்கை, கொக்குவில் யாழ்)

**ஜெய்ச்சா** (செல்லத்துரை அமிர்தலிங்கம் - கோப்பாய் வடக்கு, யாழ்.)

**அல்பேட்** (கணபதிப்பிள்ளை சுவேந்திரன் - தப்பசிட்டி, பருத்தித்துறை)

**ஜெகன்** (சபரிபர் மோகனதாஸ் - மயிலிட்டி வடக்கு காங்கேசன் துறை, யாழ்)

தனை செய்து இலவச கண்ணாடி வழங்கியும் கண்ணின் வெண்விழிப்படல சத்திர சிகிச்சை வழங்க வேண்டியவர்களுக்கு அச் சிகிச்சையினை படிப்படியாக நடாத்தியும் வருகின்றனர்.

அண்மைக் காலத்திலும் முதல் தடவை ஒரு தொகுதியினருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. லயன் கழகம் வறிய மக்களின் நன்மை கருதியே இந்த ஏற்பாட்டை இலவசமாக நடாத்தி வருகின்றது.

இதற்கு டாக்டர்கள் ருகநாசனும் செல்வி சரவணமுத்து அவர்களும் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர். லயன் கழகத்தினால் இச் சேவை தொடர்ந்து இடம் பெற்று வருகின்றது. (86)

## நிவாரணம் நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கையால் திருமலையில் இருந்து இடம்பெயர்ந்து கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வசித்துவந்த மக்களுக்கு இடம் பெயர்ந்தோர்க்கான நிவாரணம் இடை நிறுத்தப்பட்டுள்ளதாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக திருமலை மூதூர்ப்பகுதி மக்களே இந் நிவாரண வெட்டுக்கு இலக்காகியுள்ளதாகவும் இதனால் பெருமளவிலான மக்கள் பெரும் கஷ்டத்தினை எதிர்கொள்ளுவதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணங்கள் ஏனைய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் வழங்கப்பட்டு வரும் அதே வேளையில் கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மட்டும் ஏன் நிறுத்தப்பட்டுள்ளது என்பது பற்றி பாதிக்கப்பட்ட மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (05)


ஜோ. எகட்டனின்

ஜெசித்தாரா

(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை)

சுண்டுக்குளி

(எமக்கு வேறு கிளைகள் இல்லை)

(சி-9777)



எமது மண்ணில் நற்பெயர் பெற்றது




றோயல் றோஸ்
ரால்கம்பவுடர்

- நறுமணமிக்கது
- சுகாதாரமிக்கது
- புத்துணர்ச்சியானது
- அனைவராலும் விரும்பதக்கது
- விலை மலிவானது

தீபா றோஸ்
ரால்கம்பவுடர்




அழகிய கொள்கலன்களில் அற்புத
தயாரிப்பாக விற்பனையிலுள்ளது

றோயல் இன்டஸ்றீஸ்
பொன்னையா லேன்,
வண்ணார்பண்ணை வடமேற்கு,
ஆனைக்கோட்டை.


**அந்தோனி** (தம்பிப்பிள்ளை சிவகுமார்-காயங்கேணி, மாங்கேணி மட்டு)
**ஈசன்-நிசன்** (பாலசுந்தரம் ரவிச்சந்திரன்-அம்பலத்தடி வீதி வந்தாறுமூலை-மட்டு)
**றெஜினோல்ட்** (சந்தனமேரி கணேஷ்-பெரிய உப்போடை-மட்டு)
**சேகரன்** (கணபதிப்பிள்ளை இராசநாயகம் காயங்கேணி, மாங்கேணி-மட்டு)
**லெப்.பாலு** (அருளம்பலம் குமாரதுரை-மேன்காமம், கிளிவெட்டி, மூதூர்-திருமலை)
**லெப்.சுரேன்** (தெய்வேந்திரம் சுந்தரமூர்த்தி-2-ம் படிவம், கந்தளாய்-திருமலை)
**2-ம் லெப்.கருணா** (கந்தசாமி சந்திரகுமார்-மாதிரிக்கிராமம், கும்புறுப்பிட்டி-திருமலை)
**2-ம் லெப்.நிமலன்** (தங்கவேலு குமாரன்-6-ம் வாய்க்கால், பன்குளம்-திருமலை)
**2-ம் லெப்.இதயன்** (சுப்பிரமணியம் சுந்தர்-வெருகல், மூதூர் திருமலை)
**கலாதரன்** (மாணிக்கம் தர்மராசா-பட்டித்திடல், மூதூர்-திருமலை)
**ஹரி** (கனகரட்ணம் சதீஸ்வரன்-1-ம் குடியிருப்பு கந்தளாய்-திருமலை)
**நீலன்** (இராமகிருஷ்ணன் இராஸ்குமார்-5-ம் வட்டாரம்,-திரியாய்-திருமலை)
**சசி** (சௌந்தரராஜா சுரேஸ்குமார்-கோபாலபுரம், நிலாவெளி-திருமலை)
**லெப்.ஆந்திரா** (மேரிபுஸ்பலதா சிங்கராயர்-இணைப்பாலை, புதுக்குடியிருப்பு-மணலாறு)
**ராணி** (கமலேஸ்வரி ஐயாசாமி-5-ம் கட்டை, அலம்பில்-மணலாறு)
**மொசாட்** (ஆறுமுகம் ஜெயமோகன்-4-ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு-மணலாறு)
**லெப்.யோகன்** (விசுவநாதன் சிவபாலன்-துணுக்காய் வீதி, மாங்குளம்-முல்லைததீவு
**தமயந்தி** (மகேஸ்வரி தில்லையம்பலம்-பொன்நகர், முள்ளியவளை-முல்லைத்தீவு)
**ஆரபி** (புஸ்பதேவி முருகேசு-மல்லாவி, துணுக்காய், மாங்குளம்-முல்லைத்தீவு)
**அகல்யா** (சந்திரகலா கைலாயபிள்ளை-யோகபுரம், மல்லாவி, துணுக்காய்-முல்லைத்தீவு)
**சிங்கன்** (சின்னையா நாகேஸ்-ஒலுமடு, மாங்குளம்-முல்லைத்தீவு)
**யசோதரன்** (வேலுப்பிள்ளை செல்வராசா-மடுவீதி, கணேசபுரம்-வவுனியா)
**குலேந்திரன்** (நவரத்தினம் நாகேஸ்வரன்-புளியங்குளம், ஓமந்தை-வவுனியா)
**2-ம் லெப்.கிருஷ்ணா** (கௌரிமலர் பொன்னம்பலம்-மாந்தை, திருக்கேதீஸ்வரம்-மன்னார்)
**2-ம்லெப்.ரகு** (அன்ரனி பெஞ்சோ-6-ம் வட்டாரம், பேசாலை-மன்னார்)
**ரோமியோ** (சபாரத்தினம் சுரேஸ்குமார்-அடம்பன்-மன்னார்)

**ஜெகன்** (சபரிபர் மோகனதாஸ் - மயிலிட்டி வடக்கு காங்கேசன்துறை, யாழ் )
**கரிகரன்** (சதாசிவம் தர்மகுலசிங்கம்- சுதுமலை வடக்கு மானிப்பாய், யாழ்.)
**சுந்தரமூர்த்தி** (சிவகுரு கிருஷ்ணபவான்- சுண்ணாகம், யாழ்.)

தமிழீழக் கடற்பரப்பில் (சங்குப்பிட்டி) பயணம் செய்துகொண்டிருந்த படகினை சிறிலங்கா விமானப் படை விமானங்கள் வட்டமிட்டபோது கடலில் குதித்துப் பலியான 03 தமிழர்கள்.

1992-ம் ஆண்டு அம்பாறை - முள்ளிவெட்டுவான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய

**மோகனசுந்தரம் / சத்தியா** (சாமித்தம்பி சதாஸ்தகுமார் - காரைதீவு, அம்பாறை)
**புனிதகுமார் / சாந்தன்** (தங்கவேல் சாந்தகுமார் கிரான், மட்டு)

வவுனியா - வண்ணாங்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவ முகாம் தகர்ப்பின்போது வீரச்சாவெய்திய

**கப்டன் மணிமாறன் / செல்வன்** (நடராசா சிவாகரன் - தண்ணீருற்று, முள்ளியவளை, முல்லைத்தீவு
**கப்டன் தெய்வம்** (நடராசா ராஜி-இராமனூர், புளியங்குளம்-வவுனியா)
**லெப். கானகன்** (சுப்பிரமணியம் சிவகுமார் சிவபுரம், வவுனிக்குளம்-மாங்குளம்)
**2-ம் லெப்-நாயகன்-ஜெயரூபன்** (சின்னத்தம்பி வசந்தகுமார் - அன்சார் வீதி, வட்டக்கச்சி-கிளி)
**பகீரதன்** (ஆறுமுகம் நடராஜா - தொப்பிக்கடையடி, இராமநாதபுரம்-கிளிநொச்சி)
**2-ம் லெப்.இளங்கோ** (இராமசாமி ரஞ்சித்-நிரஞ்சன் - மன்னார்)
**2-ம் லெப்.சுவேந்திரன்-பாபு** (கிருஷ்ணமூர்த்தி கலாதரன் - புளியங்கூடல், ஊர்காவற்றுறை-யாழ்)

1993ஆம் ஆண்டு திருமலை-ஈச்சிலம்பந்தைப் பகுதியில் தேசவிரோதிகளால் கைது செய்யப்பட்டு காணாமல் போன குடும்பஸ்தர்,

**ஆகியோரை இந்நாளில்**
**நினைவு கூருகிறோம்.**

★ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-9795)

# பொருளியல் /வர்த்தகம் A/L

(சென்ற வாரத் தொடர்ச்சி)

## மக்கள் மயப்படுத்தல்

### மக்கள் மயப்படுத்தும் பல்வேறு வழிமுறைகள் (METHODS OF DIVESTITURE)

அரசதுறை நிறுவனங்களை மக்கள் மயப்படுத்தல் என்ற தனியார் மயப்படுத்தலுக்கு அரசாங்கம் பல்வேறு வழி முறைகளைக் கையாளலாம். இங்கு அரசு கடைப்பிடித்த சில முறைகள் தரப்படுகின்றன.

1. அரசாங்கம் தனியுரிமை வகித்து வந்த தொழில்களில் தனியாரையும் ஈடுபட அனுமதி வழங்குதல் ஓர் இலகுவான ஆனால் மிகவும் தாக்கமுடைய தனியார் மயப்படுத்தும் முறையாகும். இதனை அரசாங்கம் காப்புறுதித் தொழில், பயணிகளுக்கான பஸ் சேவை, தொடர்பு சேவை (தபால் தொலைத் தொடர்பு) ஆகியவற்றில் கடைப்பிடித்தது. அதாவது தனியார் துறையினர் காப்புறுதித் தொழிலில் ஈடுபட அனுமதிக்கப்பட்டனர். பயணிகளுக்கான பஸ் சேவையில் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குப் போட்டியாகத் தனியார் பஸ்சேவை அனுமதிக்கப்பட்டது, முகவர் தபால் நிலையங்கள் அமைக்கப்பட்டமை, தொலைபேசி விபரக் கொத்து அச்சிடும் பணியைத் தனியார் கம்பனியிடம் ஒப்படைக்கப்பட்டமை ஆகியவற்றை உதாரணமாகக் கூறலாம்.

2. அரசதுறை நிறுவனங்களில் சிறந்த நிருவாகத்தை ஏற்படுத்தும் நோக்குடன் அவற்றின் நிருவாகப் பொறுப்பைத் தனியார்துறை நிறுவனங்களிடம் அரசு ஒப்படைத்தது. இது தனியார் மயப்படுத்தலுக்குச் சமமானதாகக் கருதப்பட முடியாவிடினும் நிருவாகக் கட்டுப்பாடு அரசிடமிருந்து விடுபடுகிறது. இத்தகைய செயற்பாடுகளுக்கு உதாரணமாக துல்கிரிய, வியாங்கொடை, பூகொடை ஆகிய புடவைத் தொழிற்சாலைகளைக் கூறலாம்.

3. தனியார் மயப்படுத்தும் மற்றுமோர் நடவடிக்கையாக அரச கூட்டுத்தாபனங்களின், அரச திணைக்களங்களின் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக அவற்றை மூடிவிடாமலேயே கம்பனிகள் சட்டத்தின் கீழ் கம்பனிகள் உருவாக்கப்பட்டன. இவ்வாறு உருவாக்கப்பட்ட கம்பனிகளின் பங்குகளைப் பொதுமக்களுக்கு வழங்குவதன் மூலம் அக்கம்பனிகளின் உடமையில் ஒரு பகுதி தனியாருக்கு மாற்றப்பட்டது. எனினும் பெரும்பகுதி பங்குகளை அரசாங்கம் அல்லது மற்றுமொரு அரசதுறை நிறுவனம் கொண்டிருந்தது. உதாரணமாக சந்தைப்படுத்தற் திணைக்களத்தின் பழம் பதனிடும் தொழிற்சாலைகளைக் கொண்டு நடத்துவதற்காக வரையறுக்கப்பட்ட லங்கா கனறிஸ் என்னும் கம்பனி 1982இல் உருவாக்கப்பட்டது. இதில் ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, ஸ்ரீலங்கா அரச வியாபார (ஒன்று திரட்டிய) ஏற்றுமதிகள் கூட்டுத்தாபனம் ஆகியவை பங்குகளைக் கொண்டிருந்தன. மற்றும் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தால் மேற்கொள்ளப்பட்டு வந்த அச்சுத் தொழில் நடவடிக்கையை மேற்கொள்ளும் பொருட்டு 1983இல் வரையறுக்கப்பட்ட 'சதொச' அச்சகம் கம்பனிகள் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டது. இதில் 84 பங்குகளைக் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் கொண்டுள்ளது. இவ்வாறு கூட்டுத்தாபனங்களதும் அரச திணைக்களங்களதும் செயற்பாடுகளை மேற்கொள்ள கம்பனிகள் சட்டத்தின் கீழ் கம்பனி அமைப்புக்கள் உருவாக்கப்பட்டமை தனியார் மயப்படுத்தலில் ஓர் முக்கிய அம்சமாகும்.

மேற்கூறப்பட்ட நடவடிக்கைகள் அரசதுறை நிறுவனங்களைத் தனியார் மயப்படுத்தும் செயற்பாடுகளாக அமைந்தபோதும் அரசானது தனியார் மயப்படுத்தல் தொடர்பாக சரியான திட்டமிட்ட ஒரு நடைமுறையைக் கொண்டிருக்கவில்லை என்பதையே எடுத்துக் காட்டுகின்றது. எனவே தனியார் மயப்படுத்தல் தொடர்பாக அரசு ஒரு திட்டவட்டமான கொள்கையையும் நடைமுறையையும் கடைப்பிடிப்பதற்காகப் பின்வரும் நடவடிக்கைகளை எடுத்தது.

க. கனகரத்தினம்
B. Com (Spl), Dip -in- Accy, MAAT (SL) AMILOG (UK)
சிரேஷ்ட உதவி நிதியாளர், யாழ் பல்கலைக்கழகம்

1. அரச கூட்டுத்தாபனங்களையும் சுவீகரிக்கப்பட்ட நிறுவனங்களையும் பொதுக் கம்பனிகளாக மாற்றியமைக்கும் 1987-ம் ஆண்டின் 23-ம் இலக்கச் சட்டம் இயற்றப்பட்டது.

2. 1989 மார்ச் மாதத்தில் ''தனியார் மயப்படுத்தும் குழு'' (Privatisation Committee) ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டது. (அரசாங்கம் இங்கு மக்கள் மயப்படுத்தும் குழு என்ற சொல்லைப்பயன்படுத்தாதது அவதானிக்கப்பட வேண்டும்).

மேற்கூறப்பட்டவற்றைவிட நிதி அமைச்சில் தனியார் மயப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ''வர்த்தக மயப்படுத்தும் பிரிவு'' (Commercialisation Division) ஏற்படுத்தப்பட்டது. தற்போது மக்கள் மயமாக்கல் அமைச்சு எனத் தனியானதோர் அமைச்சே ஏற்படுத்தப்பட்டுள்ளது.

1987-ம் ஆண்டின் 23-ம் இலக்க சுவீகரிக்கப்பட்ட நிறுவனங்களையும் அரச கூட்டுத்தாபனங்களையும் பொதுக் கம்பனிகளாக மாற்றியமைக்கும் சட்டம் கொண்டுவரப்பட்டதன் பின்னர் சுவீகரிக்கப்பட்ட நிறுவனங்களையும் அரச கூட்டுத்தாபனங்களையும் மக்கள் மயப்படுத்தல் தொடர்பாகப் பின்வரும் நடைமுறை பின்பற்றப்படுகிறது.

**1. சொத்துக்களை மதிப்பிடல் (Assets Valuation)**

பொதுக்கம்பனிகளாகமாற்ற இருக்கும் நிறுவனத்தின் சொத்துக்களை மதிப்பீடு செய்தல். இதனை அரச மதிப்பீட்டுத் திணைக்களம் (Department of Valuation) மேற் கொள்கிறது

**2. மூலதன, பங்குக்கட்டமைப்பைத் தீர்மானித்தல் (Preparation of Capital Structure and Share-Structure)**

தொழில் முயற்சியின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டதன் பின்னர் மூலதன, பங்குக் கட்டமைப்பு தயார் செய்யப்படுகிறது. உதாரணமாக தொழிலின் மூலதனம் 100 மில்லியனாக தீர்மானிக்கப்பட்டால் அவை ரூபா 10/- பெறுமதியான 10 மில்லியன் பங்குகளாக பிரிக்கப்படலாம்.

**3. அமைப்பு அகவிதிகளையும் புறவிதிகளையும் தயாரித்தல் (Preparation of Articles & Memorandum of Association)**

அமைப்புப் புறவிதிப் பத்திரத்திலோ அல்லது அகவிதிப் பத்திரத்திலோ இயக்குநர்களது பெயரைக் குறிப்பிட வேண்டியதில்லை. அத்துடன் அவர்கள் இக்கம்பனி கூட்டிணைக்கப்படும் போது ஒரு பங்கையேனும் வைத்திருக்க வேண்டுமென்ற அவசியமும் இல்லை. அமைப்புப் புறவிதி அகவிதிப் பத்திரங்கள் திறைசேரிச் செயலாளரால் (Secretary to the Treasury) கையொப்பமிடப்படும்.

# மாணவர் அரங்கு

**4. அமைச்சரவைக்கு அறிக்கை சமர்ப்பித்து அனுமதி பெறல் (Sponsor a Cabinet Memorandum Requesting the Approval of the Cabinet)**

1987-ம் ஆண்டின் 23-ம் இலக்கச் சட்டத்தின்கீழ் அரச முயற்சியொன்றைக் கம்பனியாக மாற்றுவதற்கான அனுமதியை உரிய அமைச்சர் அமைச்சரவைக்கு அறிக்கையொன்றைச் சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். இதில் மூலதன அமைப்பு பங்குகளின் அமைப்பு ஆகிய விபரங்கள் கொடுக்கப்பட வேண்டும். அத்துடன் உத்தேசிக்கப்பட்டுள்ள இயக்குநர் சபை உறுப்பினர் விபரமும் கொடுக்கப்படல் வேண்டும்.

**5. நிதி அமைச்சரின் இசைவு பெறப்படல் (Concurrence of the Minister of Finance)**

அமைச்சரவையின் அனுமதி பெறப்பட்டதும் நிதி அமைச்சரின் அனுமதி பெறப்பட வேண்டும் இதற்கான நடவடிக்கையை உரிய அமைச்சரே மேற்கொள்வார் அதில் அவர் கூட்டுத்தாபனத்தை அல்லது சுவீகரிக்கப்பட்ட நிறுவனத்தைக் கம்பனியாக மாற்ற முடிவு செய்து அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டதையும் மூலதன அமைப்பு மற்றும் பங்கு விபரங்களையும் குறிப்பிடவேண்டும் அத்துடன் அமைப்புப்புறவிதி அமைப்பு அகவிதி ஆகியவற்றின் பிரதிகளும்இணைக்கப்படல் வேண்டும்

**6. ஆவணங்களைக் கம்பனிகள் பதிவாளருக்கு அனுப்புதல் (Forwarding the documents to the Registrar of Companies)**

அமைப் புறவிதிப்பத்திரம், அமைப்பு அகவிதிப்பத்திரம், மூலதன, பங்கு அமைப்பு விபரங்கள், அமைச்சரவையின் அங்கீகாரம், நிதி அமைச்சரின் இசைவுக் கடிதம் ஆகியவற்றைக் கம்பனிகள் பதிவாளருக்கு உரிய அமைச்சர் அனுப்புவார்.

**7. பொதுக் கம்பனியாக மாற்றுதல் (Conversion into a Public Company)**

உரிய ஆவணங்களைக் கம்பனிப் பதிவாளர் பெற்றுக் கொண்டதும் அவர்,

அ) 1982-ம்ஆண்டின்17-ம் இலக்கக் கம்பனிகள் சட்டத்திற்கு அமைய கூட்டிணைத்தற் பத்திரத்தை (Certificate of Incorporation) வழங்குவார்.

ஆ) குறிப்பிட்ட அரச யாக்கத்தை அல்லது சுவீகரிக்கப்பட்ட நிறுவனத்தை பொறுப்பேற்று நடாத்த பொதுக் கம்பனி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளதாக அரச வர்த்தமானியில் அறிவிப்புச் செய்வார்.

மேற் கூறப்பட்ட நடைமுறைகளுக்கு அமைய அரச முயற்சி ஒன்று கம்பனியாக மாற்றப்பட்டதும் அதன் முழுப் பங்குகளும் திறைசேரிச் செயலாளரது பதவிப் பெயருக்கு கம்பனிகள் பதிவாளர் ஒதுக்கீடு செய்வார். இதில் அவதானிக்கப் பட வேண்டிய பிரதான விடயம் யாதெனில் இவ்வாறு பொதுக் கம்பனி உருவாக்கப்பட்டு ''பங்குகள் திறைசேரிச் செயலாளருக்கு ஒதுக்கப்படுவதனால் இன்னமும் அக்கம்பனி அரச உடமையாகவே உள்ளது. ஏனெனில் முழுப் பங்குகளையும் அரசே வைத்துள்ளது. எனவே திறைசேரி செயலாளர் பெயரிலுள்ள பங்குகள் விற்கப்படும்போது தான் அது தனியார் மயப்படுத்தல் என்ற மக்கள் மயப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுகிறது.

இவ்வாறு பொதுக் கம்பனியாக மாற்றியமைக்கப்பட்டதன் பின்னர் அதன் பங்குகளை எந்த அடிப்படையில் ஒதுக்கீடு செய்வது என்பதை ''உரிமையை மாற்றும் குழு'' (Divestiture Committee) தீர்மானிக்கும். இக்குழுவின் தலைவராக உரிய அமைச்சின் செயலாளர் செயற்படுவார். இதில் ஆகக் குறைந்தது மூன்று உறுப்பினர்களும் ஆகக் கூடியது ஐந்து உறுப்பினர்களும் இடம்பெறுவர். இக்குழுவை அமைச்சரவை நியமனம் செய்யும். இக்குழுவின் தீர்மானத்திற்கு அமைய ஊழியர்களுக்கு ஒதுக்கப்படும் பங்குகள் அவர்களிற்கு இலவசமாக விநியோகிக்கப்படும். பொதுவாக மொத்தப் பங்குகளில் 10% ஊழியர்களுக்கு ஒதுக்கப்படுகிறது. இப்பங்குகள் ஊழியர்களிடையே அவர்களின்சேவைக்கால அளவை அடிப்படையாகக் கொண்டு பகிர்ந்தளிக்கப்படும். இங்கு முக்கியமாக அவதானிக்கப்பட வேண்டிய மற்றொரு விடயம் யாதெனில் ஊழியர்களுக்குக் கட்டாயமாக பங்குகள் ஒதுக்கப்பட வேண்டுமென்றோ அது 10% வீதமாக இருக்க வேண்டுமென்றோ சட்டக் கட்டுப்பாடுகள் எதுவுமே இல்லை. உதாரணமாக மக்கள் மயமாக்கப்பட்ட யுனைடெட் மோட்டேர்ஸ் கம்பனியின் 5% பங்குகள் மட்டுமே ஊழியர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் துல்கிரிய ஆடைத் தொழிற்சா

(4ஆம் பக்கம் பார்க்க)

# விலங்கியல் A/L

யுருக் குடம்பி எனப்படும்.

7. இம் மூன்றாம் பருவக் குடம்பி நிலையே மனிதனில் தொற்றும் பருவமாகும். இது நுணுக்குக்காட்டிக்குரியது. நீண்ட உருளை யுருவான உடலையுடையது

பருவம் செல்லும்பாதை

கை, கால் தோல் வெளிப்புறம் —> தோலினுள்—> குருதி / நிணநீர் / நாளத் தொகுதி இதயம் > நுரையீரல் நாடி—> நுரையீரல் -> சுவாசப் பைக்

தினாலும் பழைய கடிபட்ட துளைகளிலிருந்து தொடர்ந்து குருதி வெளியேறுவதினாலும் கொடிய குருதிச் சோகை (Pernicious Anemia) தோன்றும்.

3 நுரையீரல் தொற்றுத

5. கால்நடைகளில் இவ்வினம் அல்லது இவற்றைச் சார்ந்த ஏனைய இனங்கள் காணப்படும்போது நோயுற்று, பலமற்று மெலிந்து இறைச்சி, பால், முட்டை என்பனவற்றில் வீழ்ச்சி ஏற்

(முன்னைய தொடர்ச்சி)

# கொழுக்கிப்புழு


## அறிமுகம்

கொழுக்கிப்புழு கணம் நெமற்றோடாவைச் சார்ந்த **Ancylostoma duodenale** எனும் ஓர் இனமாகும். இது ஆசியா, வட ஆபிரிக்கா, ஐரோப்பா நாடுகளைச் சேர்ந்த மனிதனின் சிறுகுடலில் வாழும் கலப்புற, பல்கல ஒட்டுண்ணியாகும் இது மனிதனில் காணப்படும் மிகவும் ஆபத்தான நெமற்றோடா ஒட்டுண்ணி இவவொட்டுண்ணி பொதுவாக பொருளாதார வசதி குறைந்த மக்களிடம் அதாவது மலசலகூட வசதி அற்ற பாதணி உபயோகிக்காத மக்களிடம் கூடுதலாக காணப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது. இவற்றின் வாழ்க்கை வட்டத்தில் காவி இடைவிருந்து வழங்கி இல்லை என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும் தனது சொந்த முயற்சியினால் மனிதனைச் சென்றடைகிறது இது மனிதனில் சிறுகுடல் சுவரை சேதமாக்கியும் குருதி இழப்பின் மூலம் குருதிச் சோகையை ஏற்படுத்தியும் தீமை விளைவிக்கின்றது.

## அமைப்பு

நீண்ட உருளையுருவான இருபக்கமும் கூரான தடித்த மீள்சக்தியுள்ள புரதத்திலான புறத்தோலையுடைய அகத்தே போலிக் குழியுடைய உடலையுடையன. இவற்றின் முன்முனை முதுகுப்புறமாக வளைந்துள்ளதினால் கொழுக்கிப்புழு **(Hook worms)** என அழைக்கப்படுகிறது. முன்முனையில் புறத்தோல் உள்மடிந்து பெரிய வாய்க்குரிய உறையுண்டு. இவற்றில் இருசோடி பக்க வயிற்றுப் புறமாக இருசோடி வெட்டும் பற்கள் உண்டு. இவை விருந்து வழங்கியின் குடலில் பற்றிப் பிடித்து துவாரத்தை ஏற்படுத்தி தொண்டை குருதியை உறிஞ்ச உதவும்.

மேலும் வெளித்தோற்றத்தில் ஆண், பெண் என வேறுபடுத்துக் கூறக் கூடியதான இலிங்க ஈருடமை இயல்புடையது. பெண் ஏறக்குறைய 12 மி.மீ நீளமுடையதாகவும், 0. 6 மி. மீ விட்டமுடையதாகவும் வாயில் நுண்முட்களையும் கொண்டிருக்கும். ஆண் 9 மி. மீ. நீளமுடையதாகவும் 0 5 மி. மீ. விட்டமுடையதாகவும் பின்முனையில் கழியலறையைச் சுற்றி புணர்ச்சிப் பையையும் கொண்டிருக்கும். இது புணர்ச்சியின்போது பெண்ணைத் தாங்க உதவும்




Entamoeba histolytica
நிறைவுடலித் தோற்றம்

## வாழ்க்கை வட்டம்

1. நிறையுடலி ஆணும் பெண்ணும் மனிதனின் சிறுகுடலின் சடைமுளையில் உள்ள சீதமுளிப்படையை வெட்டி துவாரத்தை ஏற்படுத்தி குருதியை உறிஞ்சி உணவாக்கி சடை முளையில் தற்காலிகமாக பற்றிக் கொண்டு வாழும்.

2. ஆணும் பெண்ணும் புணர்ந்து அகக்கருக்கட்டலை நடாத்தி ஒரு நாளுக்கு ஏறக்குறைய 1500 முட்டைகளை உணவுக் கால்வாயினுள் இடும்.

3. முட்டைகள் மேற்கொண்டு விருத்தியடைந்து நான்கு கலன்களை கொண்ட நிலையில் மலத்துடன் வெளிச் சூழலை அடையும்.

4. வெளிச்சூழலில் ஈரலிப்பும் மிதமான வெப்பமும்(65° பரனைட்டுக்குமேல்) உள்ள காலநிலை காணப்படும்போது (மழைக்காலம்) முட்டைகள் பொரித்து முதலாம் பருவ குடம்பி வெளியேறும். இது கோலுருக் குடம்பி எனப்படும்.

5. முதலாம் பருவக் குடம்பி மண்ணிலுள்ள சேதனப்பதார்த்தங்களைஉட்கொண்டு வளர்ச்சியடைந்து தோலைக் கழற்றி 2-ம் பருவக் குடம்பியாக மாறும்.

6. 2ஆம் பருவக் குடம்பியும் மண்ணிலுள்ள சேதனப்பதார்த் தங்களை உட்கொண்டு வளர்ச்சியடைந்த தோலைக் கழற்றி 3ஆம் பருவக்குடம்பியும் மண்ணில் தோன்றும். இது பைலேரிடிக்குரியது. நீண்ட உருளையுருவான உடலையுடையது 2-ம் பருவக் குடம்பியின் புறத்தோல் பாதுகாப்பு உறையாகக் காணப்படும் ஈரலிப்பை விரும்பும். பல அடி ஆழத்தில் காணப்பட்டாலும் புவியீர்ப்பிற்கு எதிராகஅசைந்து மேலே வரும். உணவு உட்கொள்ளாது சில கிழமை வரை உயிர்வாழும்.

8. இத் தொற்றும் பருவம் மனிதனின் கால் அல்லது கைகளில் தொடுகை உறும்போது வெப்பத்தை உணருவதால் விரல் மடிப்புகளில் உள்ள மெல்லிய தோல் பகுதியைத்துளைத்து உள்ளே சென்று குருதி ஓட்டத்தை அடைகிறது.

9. பின் இதயத்தை அடைந்து அங்கிருந்து நுரையீரல் நாடிவழியாக நுரையீரலை அடைகிறது ஆனால் இவை தவறி தொகுதி சுற்றோட்டத்தை அடையின் இறந்து விடும்.

10. நுரையீரலின் சிற்றறை மேலணியைத் துளைத்து சிற்றறைக்குள் ஊடுருவி சுவாசப்பை குழியின் உள்ளிடத்தை அடைகிறது.

11. சுவாசப் பாதைகளில் உள்ள பிசிர்களின் வெளிநோக்கிய அடிப்பினால் சுவாசப்பைக் குழாய், வாதனாளி வழியாக தொண்டைக்குக் கொண்டு வரப்படுகிறது.


12. இச்சமயம் தொண்டையில் ஏற்படும் கூச்சம் அல்லது அரிப்புத் தன்மையினால் ஏற்படும் இருமுதலின் பின்னர் ஏற்படும் விழுங்குதலின்போது களம், இரைப்பை ஆகியவற்றை அடைந்து பின் சிறுகுடலை அடையும்.

13. சிறுகுடலில் இவை மேலும் இரு தடவை தோல் கழற்றி நிறைவுடலியாக மாறி குடல் சுவரின் சீத மேலணியில் தொடுகை உணவு உட்கொண்டு வளர்ச்சியடைந்து இனப்பெருக்கத்தை மேற்கொள்ளும்

14. மனிதனில் தொற்றும் ... நுரையீரல் நாடி —> நுரையீரல் —> சுவாசப் பைக் குழாய் —> வாதனாளி —> குரல்வளையறை —> தொண்டை —> களம் —> இரைப்பை —> சிறுகுடல்

## நோய் அறிகுறியும் வாழ்க்கை வட்டநிலையும்

1. கால், கைவிரல்களிடையில் உறுத்தல், நீர்ச்சிரங்கு தரைச்சிரங்கு தோன்றல்:- தொற்றும் பருவ நிலைகள் கால், கைகளில் மெல்லிய தோலை துளைத்துச் சென்ற இடத்தில் ஏற்பட்ட காயத்தில் பற்றீரியாக்களின் தொற்றுதலினால் ஏற்படுகின்றது.




Ancylostoma duodenale
நிறைவுடலித் தோற்றம்.

2. கொடிய குருதிச் சோகை தோன்றல்:- நிறைவுடலியினால் சிறுகுடலின் சீதமுளிப்படையை தனது வெட்டும் பற்களினால் துளைத்து பற்றிக் கொண்டு குருதியை உறிஞ்சும் இதன்போது குருதி உறையாது இருக்க திரளல் எதிரியை சுரக்கும். நிறைவுடலிகள் அதிக எண்ணிக்கையில் காணப்படும்போது கூடுதலாக குருதி உறிஞ்சப்படுவ ... mia) தோன்றும்.

3 நுரையீரல் தொற்றுதலும் இருமலும்;- தொற்றும் பருவ நிலைகள் சிறுகுடலை அடைவதற்கு இடையில் நுரையீரலைத் துளைத்துச் செல்லும். இதனால் நுரையீரலில் ஏற்படும் காயத்தில் தொற்றுதல் ஏற்படும். இதன் விளைவாக இருமல் நிமோனியா என்பன ஏற்படுகின்றது.

4. தோலின் கீழ் தழும்பு தோன்றல் :- தொற்றிய குடம்பிகள் தோலின் கீழுள்ள குருதிக் கலன்களூடாக இடம் பெயரும் போது தற்காலிகமாக குருதியோட்டம் தடுக்கப்பட்டு செந்நிறத் தழும்புகள் தோன்றும்.

## நோயைக் கண்டுபிடித்தல்

1. நோயாளியின்மலப்பரிசோதனை மூலம் பளிங்கு முட்டைகளை அடையாளம் காணல்.

2. குழந்தைகளின் வயிறு பொதுவாக வீங்கியிருப்பதுடன் அழுக்கு உண்பர்.

3. கொழுக்கிப்புழு தொற்றிய குழந்தைகள் தூக்கத்தில் குடிபெயரும் குடம்பிகள் தொண்டையில் கூச்சத்தை ஏற்படுத்துவதால் தமது பற்களை நறுவுவதைக்காணலாம்.

4. வயதானவர்கள், குழந்தைகள், பலவீனமானவர்களிலும் தொற்றுதல் ஏற்பட்டிருப்பின் குருதிச் சோகை போன்ற அறிகுறிகள் தென்படும். இதன் விளைவாக மந்தபுத்தி, சக்தியின்மை, சோர்வு, உடல் தொழிலியல் குழறுபடிகள் என்பன காணப்படும்.

... இறைச்சி, பால், முட்டை என்பனவற்றில் வீழ்ச்சி ஏற்படும்.

## தடுப்பு

1. தொற்றுண்டவரினால் இன்னொருவருக்குத் தொற்றுதல் ஏற்படுத்தலாமாகையால் தொற்றுண்டவர் தொற்றப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளித்தல்.

2. தொற்றுள்ளவரின் மலத்தின் மூலம் முட்டைகள் சூழலுக்கு கொண்டு வருவதினால் இம்மலம் சூழலுக்குச் செல்வதை தடுத்தல். அதாவது மலம் திறந்த வெளியில் கழிக்கப்படுவதைவிடுத்து மல சல கூடங்களை பாவிக்க வேண்டும்.

3. தொற்றுதல் நிலைகள் வெறுங்காலினூடாக மனிதவுடலை அடைவதினால் இத் தொற்று நிலைகள் காணப்படும் என சந்தேகப்படும் ஈரலிப்பான இடங்களில் நடமாடுகையில் பாதணியை உபயோகித்தல்.

4. அழுக்கு நீர், உணவு மூலம் தொற்று நிலைகள் வாயினூடாகவும் உள்ளெடுக்கப்படலாம். எனவே சுகாதாரப் பழக்கவழக்கங்களைக் கடைப்பிடிக்க வேண்டும்.

5. குழந்தைகள்அழுக்கான மண்ணில் விளையாடுதல், அளைதல், தின்னுதல் என்பவற்றை தடுக்க வேண்டும்.

6. தொற்றல் ஏற்படக் கூடிய வெள்ளப் பெருக்கான, ஈரலிப்பான இடங்களைத்தவிர்த்தல் (தொடரும்)


**மோ. மேரின் அல்போன்ஸ்**
(விலங்கியல் ஆசிரியர்)
பரியோவான் கல்லூரி

# பொருளியல்

லைப் பங்குகள் 100% மும் வெளிநாட்டுக் கம்பனி ஒன்றிற்கு (தென்கொரிய) விற்கப்பட்டுள்ளது ஊழியர்களுக்கு தீர்மானிக்கப்பட்ட பங்குகள் போக ஏனைய பங்குகளை வெளிநாட்டுக் கம்பனிகளிற்கோ அல்லது உள்ளூர் கம்பனிகளிற்கோ அல்லது பொது மக்களிற்கோ விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன் ஒருபகுதி பங்குகளை விரும்டனால் அரசாங்கம் வைத்திருக்கலாம். ஆனால் இவ்வாறு அரசாங்கம் வைத்திருக்கும் பங்குகளின் எண்ணிக்கை மிக குறைவானதாகவே இருக்கும். உதாரணமாக மக்கள் மயப்படுத்தப்பட்ட புகாரி ஹோட்டலின் பங்குகளில் 10% மட்டுமே திறைசேரி வைத்துள்ளது. மேலும் பங்குகள் விற்பனை தொடர்பாக சாதாரண கேள்விப் பத்திர நடைமுறையையும் அரசாங்கம் பின்பற்றலாம். உதாரணமாக வரையறுக்கப்பட்ட இலங்கைத் தோற்பொருள் உற்பத்திக் கம்பனியின் 90% ஆன பங்குகள் கேள்விப் பத்திர முறை மூலம் உள்ளூர் முதலீட்டு நிறுவனமொன்றுக்கு விற்கப்பட்டது.

1987ஆம் ஆண்டில் 23ஆம் இலக்க சட்டத்தின் கீழ் மக்கள் மயமாக்கப்பட்ட முதலாவது தொழில் முயற்சி யுனைடெட் மோட்டேர்ஸ் லங்கா லிமிடெட் ஆகும். இக்கம்பனி ஓர் தனியார் துறை கம்பனியாக 1945இல் உருவாகியது. வியாபாரச் சுவீகரிப்புச் சட்டத்தின் கீழ் இது 1972இல் தேசிய மயமாக்கப்பட்டு அரசாங்கத் தொழில் முயற்சியாக செயல்பட்டு வந்தது. இது 1989இல் பொதுக் கம்பனியாக மாற்றியமைக்கப்பட்டது. இதில் 90% பங்குகள் பொதுமக்களிற்கும், 5% பங்குகள் ஊழியர்களிற்கும், மிகுதி 5% பங்குகளும் மிற்சுபிசி கோப்ரேசனுக்கும் (யப்பான்) வழங்கப்பட்டது. பொதுமக்களில் சுமார் 1232 பேர் பங்குகளைக் கொள்வனவு செய்துள்ளார்கள். இதுவரையில் சுவீகரிக்கப்பட்ட நிறுவனத்திலும் கூட்டுத்தாபனத்திலும் சுமார் முப்பது தொழில் முயற்சிகள மக்கள் மயமாக்கலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. மேலும் முப்பத்தைந்து அரசதுறை தொழில் முயற்சிகள் பொதுக் கம்பனிகளாக மாற்றி அமைக்கப்பட்டு அவற்றின் பங்குகளை விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

மக்கள் மயமாக்குதல் தொடர்பாக மாணவர் கவனத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டிய பிரதான விடயங்கள் பின்வருமாறு;

1. சுவீகரிக்கப்பட்ட நிறுவனங்கள், அரசயாக்கங்கள், நியதிச் சட்ட சபைகள் ஆகியவையே 1987ஆம் ஆண்டின் 23ஆம் இலக்க அரச கூட்டுத்தாபனங்களையும், சுவீகரிக்கப்பட்ட நிறுவனங்களையும் பொதுக் கம்பனிகளாக மாற்றி அமைக்கும் சட்டத்தின் கீழ் பொதுக் கம்பனிகளாக பாற்றி அமைத்து பின்னர் அவற்றின் பங்குகளைத் தனியாருக்கு விற்பனை செய்வதன் மூலம் மக்கள் மயப்படுத்தப்படுகிறது.

2. ஏற்கனவே அரசாங்க சொந்தக் கம்பனிகளாக உள்ளவற்றை தனியார் மயப்படுத்துவதற்கு அவை கம்பனிச் சட்டத்தின்கீழ் பொதுக் கம்பனிகளாக மாற்றி அமைக்கப்பட்டு பின்னர் அவற்றின் பங்குகளை தனியாருக்கு விற்பதன் மூலம் மக்கள் மயப்படுத்தல் மேற்கொள்ளப்படும்.

3. ஏற்கனவே அரசாங்க பொதுக் கம்பனியாக உள்ளவற்றை மக்கள் மயமாக்குதல் மிக இலகுவானது. ஏனெனில் அரசாங்கம் வைத்திருக்கும் அவற்றின் பங்குகளை விற்பனை செய்வதன் மூலம் மக்கள் மயப்படுத்தலாம்.

4. அரசாங்கத் திணைக்களங்களைத் தனியார் மயப்படுத்துவது தொடர்பாக அவற்றின் சொத்துக்களை விற்றல் அல்லது முற்றாகக் குத்தகைக்கு விடல் ஆகிய நடைமுறைகளை பின்பற்றலாம் அல்லது அவை கூட்டுத்தாபனமாக மாற்றி அமைக்கப்பட்டு பின்னர் 1987ஆம் ஆண்டின் 23ஆம் இலக்க சட்டத்தின் கீழ் பொதுக் கம்பனியாக மாற்றி அமைக்கப்பட்டு மக்கள் மயப்படுத்தலாம்,

5. அரச துறை நிறுவனமொன்று மக்கள் மயப்படுத்தப்பட்ட பின்னர் 1982-ம் ஆண்டின் 17-ம் இலக்க சட்டத்திற்கு அமையவே செயற்பட்டு வரும்.

6. கம்பனிச் சட்டத்தின் கீழ் ஒரு பொதுக் கம்பனியை உருவாக்குவதற்கும் 1987-ம் ஆண்டின் 23-ம் இலக்க சட்டத்தின் கீழ் அரச கூட்டுத்தாபனங்களையும் சுவீகரிக்கப்பட்ட நிறுவனங்களையும் பொதுக் கம்பனிகளாக மாற்றி அமைப்பதற்கும் இடையிலான வேறுபாடுகளையும் அவதானித்தல் வேண்டும்.

## மக்கள் மயமாக்குதலின் விளைவுகள்

ஏற்கனவே கூறப்பட்டது போன்று மக்கள் மயமாக்கலானது ஓர் தனியார் மயப்படுத்தும் செயற்பாடு ஆகும். மக்கள் மயமாக்கலின் போது கூறப்படுவது யாதெனில் ஊழியர் தொழிலின் உடமையாளர்களாக மாறுகின்றனர் என்பதாகும். ஆனால் இது எந்தளவிற்கு பொருத்தமானது என்பது கேள்விக்குரியது ஏனெனில் இதில் ஊழியருக்கு பொதுவாக 10% பங்குகள் இலவசமாக வழங்கப்படுகின்றபோதிலும் 90% பங்குகள் வெளிநாட்டு கம்பனியொன்றினாலோ அல்லது ஒரு குறிப்பிட்ட பங்குதாரர்களினாலோ உடமையாக்கப்படுகிறது. எனவே அத்தகைய கம்பனிகளில் ஊழியர்களின் கட்டுப்பாடு மிகக் குறைவாகவே காணப்படும். சில சமயங்களில் அவர்கள் எல்லோருமே சேர்ந்து ஒரு இயக்குநரை தான் நியமிக்கக் கூடியதாக இருக்கும். மேலும் ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட பங்குகளை அவர்கள் விற்றுவிடுவதற்கும் தடையேதும் இல்லை. எனவே ஊழியர்கள் தொழில் உரிமையாளர் என்பது பொருத்தமற்றது. சில கம்பனிகளில் ஊழியர்களுக்குப் பங்குகள் ஒதுக்கப்படாமல் கூடப் போகலாம்.

மக்கள் மயமாக்குதல் மூலம் அரச தொழில் நிறுவனங்கள் மக்களிடம் ஒப்படைக்கப்படுகிறது எனக் கூறப்படுகிறது. ஆனால் உண்மையில் நடப்பதென்ன? அரசாங்கச் சொத்துக்கள் வெளிநாட்டு கம்பனிகளிற்கும் வெளிநாட்டு முதலீட்டாளர்கட்கும், உள்ளூர் கம்பனிகளிற்கும், உள்ளூரில் ஒரு குழுவினரான பங்குதாரருக்கும் மட்டுமே மக்கள் மயமாக்குதல் என்ற செயற்பாடு மூலம் விற்கப்படுகிறது. மக்கள் மயமாக்கலில் அரச துறை நிறுவனங்கள் பொதுக் கம்பனியாக மாற்றியமைக்கப்பட்டு பங்குகள் விற்கப்படுகிறது. இதனை மக்கள் எல்லோரும் நிறுவனத்தின் உடமையாளர்கள் எனக் கூறுவதனால் கம்பனிச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள பொதுக் கம்பனிகளையும் அவ்வாறு கூறலாமல்லவா? அவ்வாறு கூறுதல் எவ்வாறு பொருந்தும்?

மக்கள் மயமாக்குவதன் மூலம் அரசாங்கம் மூலதனச் சந்தையை அபிவிருத்தி செய்ய முடியும் என எதிர்பார்க்கின்றது ஆனால் இதுவும் எந்தளவிற்கு வெற்றி அளிக்கும் என்று கூற முடியாது. ஏனெனில் அரசதுறை தொழில் முயற்சிகளின் பாரியளவு மூலதனமான பங்குகளை கொள்வனவு செய்து முதலீடு செய்யக்கூடிய வாய்ப்பு எந்த அளவிற்கு பொது மக்களிடையே உள்ளது என்பது கேள்விக்குரியது. இதனால் பெரும் பகுதியான மக்கள் மயமாக்கப்பட்ட கம்பனிகளின் பங்குகள் வெளிநாட்டு கம்பனிகளினால் கொள்வனவு செய்யப்படுகிறது. உதாரணமாக யுனைடெட் மோட்டேர்சில், மிற்சுபிசி கோப்பரேசன் (யப்பான்), துல்கிரிய ஆடைத் தொழிற்சாலையில் காபூல் லங்கா லிமிட்டெட் (தென்கொரியா) பூகொடை ஆடை தொழிற்சாலையில் லக்சுமி லிமிட்டெட் (இந்தியா), சிலோன் ஒக்சிசன் கம்பனியில் நொஸ்க்கே ஹைட்றோ (நோர்வே) எண்ணெய் கொழுப்பு கம்பனியில் பிறிமா லிமிடெட் ஆகியவை பங்குகளைக் கொள்வனவு செய்துள்ள வெளிநாட்டுக் கம்பனிகளாகும்

மக்கள் மயமாக்குதல் மூலம் அரசாங்கம் அரசதுறை தொழில் முயற்சிகளின் மீது செலவிட்டு வந்த பெருந்தொகைப் பணத்தை மீதப்படுத்த முடிகின்றது எனக் கூறப்படுகிறது. இதனைப் பொறுத்த வரையில் அரசாங்கம் தனது நிதிச்சுமையை தவிர்த்துக் கொண்டாலும் பொதுமக்கள் குறைந்த விலையில் குறைந்த கட்டணத்தில் பொருளை. சேவையைப் பெறுகின்ற வாய்ப்பை இழந்துவிட்டனர் அரசாங்கத்தின் நட்டத்தை சமுதாயத்தின் ஒரு பகுதியினரது இலாபமாகக் கருதலாம்.

மக்கள் மயமாக்குதலின் மூலம் அரசாங்கம் தனது செலவினத்திற்கான வருவாயைப் பெற்றுகொள்கின்றது இதன்மூலம் அரச கடன் வரிச்சுமை ஆகியவை குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் இவ்வாறு பெறப்படும் பணத்தின் பெரும் பகுதி நுகர்ச்சிச் செலவினங்களிற்காகவும் யுத்தத்திற்காகவும் செலவிடுவதன் மூலம் சிறந்த பலனைப் பெறும்வாய்ப்பு இழக்கப்படுகின்றது. இது தனிப்பட்ட ஒருவர் தனது சொத்துக்களை விற்று சாப்பிடுவதற்கும், வழக்குப் பேசுவதற்கும் செலவழிப்பது போன்றது.

மக்கள் மயமாக்கப்பட்ட கம்பனிகள் மூலம் பொது மக்கள் நலனில் அக்கறை காட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதுவும் சந்தேகத்திற்குரியது ஏனெனில் இக்கம்பனிகளின் முகாமையாளர்கள் தமது பங்குதாரர்களின் இலாபத்திலேயே அக்கறை கொண்டிருப்பர். இதனால் கூடுதலான விலை கொடுத்து சேவையை, பொருட்களைப் பெற வேண்டிய நிலை ஏற்படும்.

மக்கள் மயமாக்கல் மூலம் நட்டத்தில் இயங்கும் அரச தொழில் முயற்சிகளை விற்று நிதிப்பளுவைக் குறைக்கலாமெனக் கூறப்படுகிறது. அவ்வாறெனில் எக்காரணங்களுக்காக இலாபத்தில் செயற்பட்டுவந்த பல கூட்டுத்தாபனங்கள்கூட மக்கள் மயமாக்கப்பட்டுள்ளன?

மக்கள்மயமாக்குதல் தொடர்பாக உண்மையிலேயே கடைப்பிடிக்க வேண்டியது யாதெனில் ''வைத்தால் குடுமி சிரைத்தால் மொட்டை'' என்றநிலையை அரசு கைவிட வேண்டும். அதாவது எல்லா தொழில் நிறுவனத்திலும் அரச தொழில் நிறுவனமாக இருக்கவேண்டும் என்ற கொள்கையையோ அல்லதுஎல்லாதொழில் நிறுவனமும் தனியார் துறையாக மாற்றப்பட வேண்டும் என்ற கொள்கையையோ கடைப்பிடிக்கக் கூடாது. மிகக் கவனமாக ஆராய்ந்தே எத்தொழில்களை அரசாங்கம் மேற்கொள்வது எத்தொழில்களைத் தனியார் மயமாக்குவது என்பது தீர்மானிக்கப்படவேண்டும்.


## 3-ம் ஆண்டு நினைவு நாள்



பிறப்பு
20.4.1971

வீரச்சாவு
11.07.1991

## 2-ம் லெப். ஜனகா
(சுகந்தி செந்தில்வேல்)

நீண்ட பயணத்தின் நினைவழியா நாட்கள்
போரிடும் தேசம் பொங்கி எழும் நேரம்
புயலாய் புறப்பட்ட பூக்களின் பாதையில்
இவளும் இணைந்தாள் இணையில்லா தமிழ்
மண் காக்க

ஆனையிறவினிலே
ஆகாய, கடல், வெளி சமர்களத்தில்
அணிவகுத்த வரிப்புலிகளில்
எதிரியின் பகை முடித்து எம்மண்ணை
மீட்பதற்காய்
வெடியோசை முழங்க வெறியோடு சென்றாள்
விடியலுக்கு முந்தி விதையாகி போனவளே
ஆண்டு மூன்று சென்றாலும் ஆறாது எம்துயர்.

11-07-94 இன்று எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசன நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள், போராளிகள் அனைவரையும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.

மட்டுவில் கிழக்கு.
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.
(8763)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



மலர்வு:
10-11-1934

மறைவு:
11-6-1994

அமரத்துவமடைந்த எமது பேராசான்
துரைராசா அவர்களை
இந்நாளில் நினைவு கூருகின்றோம்.



## தையல் பயிற்சி
(தொல்புரம்)

சங்கானை பிரதேச செயலர் பிரிவை சேர்ந்த பகுதிகளின் படித்த பெண்களுக்கான சுயதொழில் வேலைவாய்ப்



## மூன்றாம் ஆண்டு முகிழ்க்கும் நினைவலைகள்



## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி

லர் பிரிவை சேர்ந்த பகுதிகளின் படித்த பெண்களுக்கான சுயதொழில் வேலைவாய்ப்பினை மேம்படுத்த இலவச தையல்பயிற்சி வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

தேசிய சர்வோதயத்தின் சித்தன்கேணியிலுள்ள பிரதேச நிலையத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள மேற்படி இலவச பயிற்சி வகுப்புகளில் தையல்கலை. சிகையழகு அலங்கரிப்பு, கேக் ஐசிங் செய்தல், பூவேலைகள போன்ற கைப்பணிக்கலைகள் கற்பிக்கப்படவுள்ளன. (41)

## குடிசைகள் அமைப்பு

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம் கொட்டடிப் பகுதியில் ஐம்பது குடிசைகளை யாழ் பிரதேச செயலகத்தின் உதவியுடன் வை.எம்.சீ.ஏ. அண்மையில் அமைதது ள்ளது.

கொட்டடி கரையோரப் பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்தவர்களுக்கு இக் குடிசைகள் வழங்கப்படும். (24)

## நியமனபத்திரம் தாக்கல்

பத்தாவது பாராளுமன்றத்தின் தேர்வுக்காக இது வரை எட்டு கட்சிகளும் மூன்று சுயேட்சை குழுக்களும் நியமனப்பத்திரங்களை தாக்கல் செய்துள்ளதாக தெரிய வருகின்றது.

## கௌரவிப்பு

ஈச்சமோட்டை கலட்டிப் புலம் ஸ்ரீஞான வைரவர் தேவஸ்தானத்தின் வருடாந்த உற்சவ தினங்களில் மகாபாரத விரிவுரையாற்றிய தமிழருவி த. சிவகுமார் மேற்படி தேவஸ்தானத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

---

நினைவலைகள்



## கப்டன் வானதி

(செல்வி பத்மசோதி சண்முகநாதபிள்ளை)

| தாயின் மடியில்: | தாயக மண்ணில்: |
|---|---|
| 19 - 02 - 1964 | 11 - 07 - 1991 |

எழுதாஉன் கவிதைகளை எழுதுகிறோம் ஓயவிலை. விழுதாக வேரூன்றி விடுதலைக்காய் உன்வழியில், பொழுதாக உழைப்போரின் பூரிப்பில் உனைக்கண்டு வழுவாத அவ்வுணர்வால் வாழுகிறோம் வானதியே!

நல்லூர், அப்பா,அம்மா தங்கைகள்,
யாழ்ப்பாணம். (8728) தம்பி.

---

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



## வீரவேங்கை ஜீவா

(சசிலதா தனபாலசிங்கம்)

| பிறப்பு | வீரச்சாவு |
|---|---|
| 05.3-1974 | 11-7-1991 |

சல்லறையில் -
துயில்வது -
நீயல்ல - ஜீவா,
உன் உடலம் மட்டுமே
இங்கே - ஒவ்வோர். களத்திலும்
நீ. நிற்கின்றாய்
சக தோழியரின் வடிவில்.
மூன்று ஆண்டுகள் மறைந்தாலும் -
உன் நினைவு - நாளும்.
வாழும்.

இவருடன் வீரச்சாவடைந்த மாவீரர் அனைவரையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

மருதங்கேணி குடும்பத்தினர்
தாழையடி. (8687)

---

துரைராசா அவர்களை
இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

யாழ்.பல்கலைக்கழகம்
இராமநாதன் நுண்கலைப்பிரிவு
(8746) 2-ம் வருட மாணவர்கள்

---

## இதய அஞ்சலி



## பேராசிரியர் அ. துரைராசா

வண்ண வண்ணமாய் பூச்சொரிந்து
உன் ப்ரிய விடைக்கு
மாலையும் கழுத்துமாய்(ப்)
பார்த்த விழிகள...

மாதம் இரண்டு கடந்த போது
பாடையில் படுத்திருக்கப்
பார்த்த கொடுமை ...

ஆசை மனங்கள் அலறித்துடிக்க
வரலாற்றின் பாதையிலே
ஊர்வலமாய்ப் போனாயே!

லட்சியமாகவே வாழ்ந்துவிட்ட
உன் ஆத்மா
எம் இலட்சியங்களில் வாழ்ந்திருக்கும்.

4ஆம் வருட மாணவர்கள்
யா/பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப்பிரிவு
(8771)

## சிந்தனைக்கு..

பல முறை பிறரை ஏமாற்றிய கண்ணீர் இறுதியில் நம்மையும் ஏமாற்றிவிடுகிறது,

- லாரோஷ் ஃபுக்கோ.


ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 11-07-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண்- 05


# ஹேமா பிரேமதாசாவின் அரசியல் எதிர்காலம்

சிறிமாவோ பண்டாரநாயக்கா ஆரம்பித்து வைத்த அரசியல் பாரம்பரியத்தில் இறுதியாக ஹேமா பிரேமதாசாவும் சேர்ந்து கொண்டுள்ளார். கொழும்பு மாவட்டத்தில் ஐ.தே.கட்சியின் சார்பில் அவர் போட்டியிடவுள்ளதாக வெளிவரும் தகவல்கள் இதனை ஊர்ஜிதப்படுத்துபவையாகவுள்ளன.

அரசியல்வாதிகளான கணவன்மார்களை இழந்த பெண்கள் வரிசையில் சிறிமாவோ பண்டாரநாயக்கா, சந்திரிகா விஜேகுமாரணதுங்கா, சிறிமானி அத்துலத்முதலி, ஹேமா பிரேமதாசா ஆகியோர் இன்று அரசியலில் உள்ளனர். இன்றைய அரசியல் நிலவரத்தின்படி இவர்கள் அனைவரும் அரசியலில் ஒரு பலம் பொருந்திய சக்தியாகவும் உள்ளனர்.

இதில், இறுதியாக அரசியலுக்குள் பிரவேசிக்கும் பெண்மணியான ஹேமா பிரேமதாசாவின் பிரவேசமானது, இன்றைய சூழ்நிலையில், மிகவும் முக்கியமான ஒன்றாகவே கருதப்படுகின்றது. நீண்ட காலமாக ஐக்கிய தேசியக் கட்சியின் கோட்டையாக விளங்கிய கொழும்பு மாவட்டத்தில், இன்று அது எதிர்நோக்கும் சவாலை ஹேமா பிரேமதாசாவை ஈடுபடுத்துவதன்மூலம் டி.பி. விஜேதுங்கா சமாளிக்க முற்படுகின்றார். ஆனால் இதை ஹேமா பிரேமதாசாவால் சாதிக்க முடியுமா? என்ற கேள்விக்குப் பொதுத்தேர்தலே பதில்கூற முடியும்.

ஹேமா பிரேமதாசாவின் அரசியல் அபிலாசைகள் இலங்கையில் உள்ளவர்கள் அறியாததொன்றல்ல. திரு. பிரேமதாசா ஜனாதிபதியாக இருந்த போதே தனது பிரபலத்தை விரும்பியவர் ஹேமா பிரேமதாசா. அத்தோடு பிரேமதாசாவின் மரணச்சடங்கின் போதே எவருக்கும் ஆச்சரியம் அளிக்கும் வகையில் தனது அரசியல் அபிலாசைகளை வெளியிட்டவர்.

இந்நிலையில், டி.பி.விஜேதுங்காவின் கோரிக்கையை ஹேமா பிரேமதாசா விருப்புடன் ஏற்றுக்கொண்டார் என்றே கூறலாம். அரசியலில் பிரவேசிக்க சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்த ஹேமா பிரேமதாசா அதைப் பயன்படுத்திக் கொண்டுள்ளார். இனிமேலும் காலம்

# கொலைக் குற்றம் சாட்டப்பட்டவர் ஐ. தே. க. வேட்பாளராக போட்டி

## சஜீத் பிரேமதாசா குற்றச்சாட்டு

(கொழும்பு)

கொழும்பு மாவட்டத்தின் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் பட்டியலில் கொலைக் குற்றம் சாட்டப்பட்ட பிரமுகர் ஒருவரின் பெயர் இடம் பெற்றுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் மகன் சஜீத் பிரேமதாசா குற்றம் சாட்டியுள்ளார். இதனால் எதிர்வரும் பொதுத் தேர்தலில் தான் போட்டியிடப் போவதில்லை என அவர் கூறிவிட்டார்.

இது குறித்து அவரின் தாயார் ஹேமா பிரேமதாசா கூறுகையில்,

கொழும்பு மாவட்ட ஐ தே க. வேட்பாளர் பட்டியலில் தானும் இடம்பெற்று இருப்பதாகவும், திங்கள் (இன்று) காலையில் கொழும்பு மாவட்ட அரசாங்க செயலகத்திற்கு சென்று ஏனைய வேட்பாளர்களுடன் தமது வேட்பு மனுவை தாக்கல் செய்ய இருப்பதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் கொழும்பு மாவட்டத்தின் ஐ. தே. க. வேட்பாளர் பட்டியலில், கொலைக் குற்றம் சாட்டப்பட்ட பிரமுகர் ஒருவர் இடம் பெற்றுள்ளமைக்கும், பிரேமதாசாவின் மரணம் தொடர்பாக விசாரணைக் குழு அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை ஏற்கப்படாமைக்கும் எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாகவே சஜீத் போட்டியிட மறுப்பு தெரிவித்திருப்பதாகவும் திருமதி ஹேமா மேலும் குறிப்பிட்டார்.

# முக்கிய பிரச்சினைக்கு கட்சிகள் தீர்வை முன்வைக்க தவறிவிட்டன

## பி. பி. ஸி. விமர்சனம்

(கொழும்பு)

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலின் போது நாட்டிலுள்ள முக்கிய பிரச்சினை தொடர்பாக உண்மையான தமது நிலையை பிரதான கட்சிகள் முன்வைக்க தவறிவிட்டனஎன பலரும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

லண்டன் பி. பி. ஸியின் சிங்கள சேவையான சந்தேசிய வானொலியினர் நடாத்திய தேர்தல் தொடர்பான கருத்துக்கணிப்பீட்டில் கலந்து கொண்டோரில் பெரும்பாலானோர் இதனை தெளிவாக வெளியிட்டுள்ளனர்.

நாட்டின் பிரச்சினை எங்கோ இருக்கும் போது அது தொடர்பாக தெளிவான ஒரு நிலைப்பாட்டையோ அன்றி அதன் தீர்வுக்கான திட்டத்தையோ தெரிவிக்காத இக் கட்சிகள் தாம் தேர்தலில் வெற்றிபெற வேண்டும் என்பதில் மட்டுமே அதிக அக்கறை செலுத்தி வருவதாகவும் தமது நலனில் மட்டுமே இவர்கள் அக்கறை செலுத்தி வருவதாகவும் அக் கருத்து கணிப்பீட்டில் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

# இணைந்து போட்டியிட்டாலும் தனித்துவம் பேணப்பட உடன்பாடு

## ஐ. தே. க. - இ. தொ. கா. ஒப்பந்தம் கைச்சாத்து

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் இணைந்து போட்டியிடுகின்றபோதும் இ.தொ கா.வும், ஐ தே கவும் தத்தம் தனித்துவம் பேணுவது தொடர்பாக ஒரு பொது உடன்படிக்கையில் கையெழுத்திட்டுள்ளன.

ஐ தே.க சார்பில் ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவும், இ.தொ.கா. சார்பில் தலைவரும் அமைச்சருமான சௌ. தொண்டமானும் கடந்த ஜூலை ஆறாம் திகதியன்று கையெழுத்திட்டனர்.

இ.தொ.கா.வும், ஐ தே க.வும் செய்துகொண்டுள்ள தேர்தல் உடன்படிக்கையின் அடிப்படையில் செய்து கொள்ளப்பட்ட இந்த உடன்பாட்டில் பாராளுமன்றத்தில் இரு கட்சிகளும் தொடர்ந்தும் கூட்டாக இயங்கும் அதே வேளையில் ஒவ்வொரு கட்சியும் தனித்துவத்தை பேணும் வகையில் பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் இரு கட்சிகளும் செயற்படும்.

பரஸ்பர புரிந்துணர்வுடன் செயற்படும் அதே சமயம் ஒருவர் மற்றவரை பலவீனப்படுத்

## குருதி கொடையளித்தவர்களுக்கு நலன்புரிச்சங்கம் கௌரவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் நோயாளர் நலன்புரிச் சங்கத்தினர் நேற்று முன்தினம் நோயாளிகளுக்கு குருதிக் கொடையளித்தகொடையாளிகளை வைபவம் ஒன்றின் மூலம் பாராட்டியுள்ளனர்.

இவ் வைபவத்தில் இதுவரை குருதிக் கொடை அளித்த ... திய கலாநிதி சிவபாலன் தலைமையில் இவ் வைபவம் இடம்பெற்றது. பிரதம விருந்தினராக தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் கரிகாலனும் சிறப்பு விருந்தினராக வைத்திய கலாநிதி அருளும் கலந்து கொண்டனர்.

குருதிக் கொடை அளித்தோர், நோயாளர் நலன்

# பேராசிரியர் துரைராசா உருவப்படம் திரைநீக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழக முன்னை நாள் துணைவேந்தர் அமரர் பேராசிரியர் அழகையா துரைராசாவின் உருவப்படம் நாளை காலை 9 மணிக்கு பல்கலைக் கழக புவியியற்துறை மண்டபத்தில் திரைநீக்கம் செய்து வைக்கப்படவுள்ளது.

இவரது உருவப்படத்தினை யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் குணரட்ணம் திரைநீக்கம் செய்து மலர்மாலை சூட்டுவார். தொடர்ந்து கலைப் பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை நினைவஞ்சலியுரை நிகழ்த்துவார்.

இதற்கான ஒழுங்கமைப்புக்களை புவியியற்துறைத் தலைவர் பேராசிரியர் செ. பாலச்சந்திரன் மேற்கொண்டு வருகிறார்.

# அதிரடிப்படையினரால் இளைஞர் ஒருவர் கைது

கொக்கட்டிச்சோலை சிறிலங்கா விசேட அதிரடிப் படையினரால் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஏழாம் திகதி மாலை 4 மணியளவில் கொக்கட்டிச் சோலை விசேட அதிரடிப் படையினர் வாழைச்சேனை ஆலையடிக் குடாவிற்குச் சென்று கந்தசாமி ரவி (வயது 25) என்ற குழந்தையடி மடு இலுப்பையடிச் சேனையைச் சேர்ந்த இளைஞரையே கைது செய்து முகாமுக்கு கொண்டு சென்றுள்ளனர்.

---

## விளக்கு

பகுதியில் இருந்து வந்தேன் ரயில் அநுராதபுரத்தில் வந்து நின்றதும் சிலர் இறங்கினர். இரண்டு நிமிடங்களில் எரிந்துகொண்டிருந்தமின்விளக்குகள் அணைந்தன. அப்போ எங்களுக்கு அடுத்ததாக இருந்த பெட்டிக்குள் குண்டு வெடிக்கும் சத்தம் கேட்டது. கண்ணைப் பறிக்கும் வெளிச்சம் தெரிந்து மறைந்தது.

என்ன நடந்தது என தலையைநிமிர்த்திப்பார்ப்பதற்குள் எல்லோரும் பாய்ந்து அடித்துக் கொண்டு கீழே குதித்தார்கள். சிலர் யன்னலூடாகப் பாக்குகளை எறிந்துவிட்டு குதித்ததைக் கண்டேன். நான் வாசலால் இறங்க எத்தனித்த போது என் பின்னால் வந்தவர் என்னை முந்தி இறங்க முற்பட்ட போது நான் தவறி கீழே விழுந்தேன். எனது வலதுகை முறிந்து விட்டது.

அப்போது பொலிசாரும், ஆமியும் வந்து எல்லோரையும் சுற்றிவளைத்துக் கொண்டனர். அங்குவந்த அம்புலன்ஸில் இறந்தவர்களையும் காயமடைந்தவர்களையும் கொண்டு சென்றனர்.

குண்டு வெடித்த பெட்டிக்குள் வந்தவர்கள் பொலிசாரால் மறித்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டனர் சம்பவத்தில் சிக்கி இறந்தவர் ஜோர்டான் நாட்டில் வேலை செய்து விட்டு திரும்பியவர்எனவும் கறுப்பு நிறகட்டை காற்சட்டை அணிந்திருந்தார் எனவும் சுமார் 45 வயது மதிக்கத்தக்க இவரது சடலம் அனுராதபுரம் வைத்திய சாலையில் வைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தனர். இவருடன் இறந்த மற்றவர் முஸ்லிம் பெண்மணி எனவும் காதில் விழுந்தது.

குண்டு வெடித்த பெட்டிக்குள் இரத்தம் சிதறிக் கிடந்ததாகவும் பலர் கதைத்தனர்.

நான் மக்களுடன் மக்களாக வலியையும் பொருட்படுத்தாது இங்கு வந்து சேர்ந்தேன் என்றார்.

## புகையிரதத்திற்கு

அநுராதபுரத்திலிருந்து கடைசியாக தகவல்கள் மூலம் கைக்குண்டு ஒன்றே வெடித்திருக்கலாம் எனக் கூறப்படுகிறது. அநுராதபுரம் ரயில் நிலைய குடிநீர் தாங்கி அருகே கைக்குண்டு ஒன்று அநாதரவாகக்கிடக்கக் கண்டு பிடிக்கப்பட்டதாகவும் தெரிய வருகிறது.

குண்டு வெடிப்பு சம்பவம் பற்றி கேள்வியுற்றதும் பெருமளவு மக்கள் வவுனியா ரயில் நிலையத்தில் கூடி மேலதிக

## காயம் அடைந்தோர்

மேலும்காயமடைந்துவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்போரின் பெயர் விபரங்கள் வருமாறு: எஸ். பரராஜசிங்கம் (வயது 32) இவருக்குஒருகால் பாதிக்கப்பட்ட நிலையில் சத்திர சிகிச்சைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார், கந்தையா மயில்வாகனம்

பத்தை எதிர்பார்த்திருந்த ஹேமா பிரேமதாசா அதைப் பயன்படுத்திக் கொண்டுள்ளார். இனிமேலும் காலம் கடத்தினால் மக்கள் தன்னை மறந்துவிடுவர் என ஹேமா எண்ணியிருக்கவும் கூடும்.

ஆனால், ஹேமா பிரேமதாசாவின் வருகையை வேறு யாரும் ஏற்றுக் கொண்டார்களோ இல்லையோ, இதுவரையில் அவரது குடும்பம் ஏற்றுக் கொள்ளவில்லை என்றே எண்ண வேண்டியுள்ளது. அதிலும் குறிப்பாக மகன் சஜீத் பிரேமதாசா ஏற்றுக் கொண்டுள்ளாரா என்பதே கேள்விக்குரியதாக இருக்கின்றது. ஏனெனில், அம்பாந்தோட்டை மாவட்டத்தில் சஜீத் பிரேமதாசா தேர்தலில் போட்டியிடுவது குறித்து டி.பி. யுடன் நடத்திய பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவடைந்து கட்சி வேட்பாளர் பட்டியலும் தாக்கல் செய்தாகிவிட்டது. இந்நிலையில், தாயாரானஹேமாபிரேமதாசா ஐ.தே.கவில போட்டியிடுவதானது குடும்பத்திற்குள் சிக்கல்களை உருவாக்குவது தவிர்க முடியாதே போகும்.

மேலும் ஜனாதிபதி பிரேமதாசாவின் கொலை தொடர்பாக அரசு நடத்திய விசாரணைகளில் நம்பிக்கையில்லை, என பிரேமதாசாவின் மகனும் மகளும்அரசிற்கு எதிரானகண்டனங்களைஎழுப்பிக் கொண்டிருக்கின்றனர். இந்நிலையில் தாயார் ஐ.தே.கவில் சேர்ந்து போட்டியிடுவதென்பது அவர்களின் குற்றச்சாட்டின் மீதுள்ள பலவீனத்தையும், அதேசமயம் ஹேமா பிரேமதாசாவின் அரசியல அபிலாசைகளையும் வெளிக்காட்டும் ஒன்றாகவே உள்ளது.

இதேசமயம் ஜனாதிபதி பிரேமதாசாவின் வலது கையாக விளங்கிய வருமான சிறிசேன கூரேயும் ஹேமா பிரேமதாசா தேர்தலில் போட்டியிடுவதை விரும்பவில்லை என்றே கூறலாம். இந்நிலையானது ஹேமா பிரேமதாசாவின் அரசியற் பிரவேசத்தை அவரது குடும்பத்தினர் மட்டுமல்ல. அவரது கணவருக்கு மிக நெருங்கியவர்கள் கூட விரும்பவில்லை என்பதே உண்மை நிலையாகும்.

இவ்வாறான அபிப்பிராய பேதங்களுடனேயே ஹேமா பிரேமதாசாவின் அரசியல் பிரவேசம் அமைந்துள்ளது. இந்நிலையில் இவரின் அரசியல் எதிர்காலம் செழிப்பானதாக இருக்கவேண்டுமானால் அதற்கு அவர் தீவிரமாக உழைந்தே ஆக வேண்டும். அரசியல்வாதிகளான கணவனை இழந்த பெண்களைப் பொறுத்து சிறிமாவோ பண்டாரநாயக்காவும், சந்திரிகா குமாரணதுங்காவும் ஏற்கனவே தம்மைப் பலப்படுத்திக் கொண்டுள்ளனர். சிறிமானி அத்துலத் முதலி தேர்தலை இதுவரை எதிர்நோக்கவில்லை. ஆயினும், அவர் அரசியல் நடவடிக்கை சுமார் ஒரு வருடத்திற்கும் மேலாக இருந்து வருகின்றது. அவரது கணவர் உருவாக்கிய ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் ஒரு பகுதியினர் அவரை வலுவாக ஆதரித்தும் வருகின்றனர்.

ஆனால் அரசியலில் நிலைபெறுவதற்கு ஹேமா பிரேமதாசா தமது சக்தியை இனிமேல்தான் நிருபித்துக் காட்ட வேண்டியுள்ளது. அதாவது குடும்பத்தினரின் விருப்பத்தையும் மீறி அரசியலில் பிரவேசித்துள்ள ஹேமா பிரேமதாசாவின் எதிர்காலத்தை இனி மக்களே தீர்மானிக்க வேண்டும்.

---

டியுள்ளனர்.

இவ்வைபவத்தில் இதுவரை குருதிக் கொடை அளித்த பலர்கௌரவிக்கப்பட்டதுடன் அவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன. நோயாளர் நலன்புரி சங்கத்தின் தலைமைபணிமனையில்வைத்

ளும் கலந்து கொண்டனர்.

குருதிக் கொடை அளித்தோர், நோயாளர் நலன்புரிச்சங்க தொண்டர்கள் மற்றும் போதனா வைத்திய சாலை ஊழியர்கள் பலரும் இவ்வைபவத்தில் கலந்து கொண்டனர்.

---

பரஸ்பர புரிந்துணர்வுடன் செயற்படும் அதே சமயம் ஒருவர் மற்றவரை பலவீனப்படுத்தும் எந்த விடயத்திலும்நேரடியாகவோ மறைமுகமாகவோ ஈடுபடக்கூடாது. கருத்து முரண்பாடுகளை ஊக்குவிக்கும் விதத்தில் செயற்படுதல் ஆகாது.

தேர்தல் காலத்தில் மட்டுமன்றி தெரிவு செய்யப்பட்ட பின்பும் இ.தொ.கா. தனது உறுப்பினர்கள்மீது பூரண சட்டுப்பாட்டைக் கொண்டிருக்கும். இ.தொ.கா. வின் உறுப்பினர்கள் தொடர்பாக ஏதும்வெற்றிடம் ஏற்பட்டால் அது இ.தொ.கா. வினாலேயே நிரப்பப்பட வேண்டும். இ.தொ.கா. உறுப்பினர் மீது இ.தொ.கா. எடுக்கும் ஒழுங்கு நடவடிக்கையை ஐ.தே.க. அங்கீகரிக்கும். பாராளுமன்றத்திலுள்ள இ.தொ.கா. உறுப்பினர் எண்ணிக்கை தொடர்ந்து பேணப்பட வேண்டும் என்பன அவ் உடன்பாட்டின் சில அம்சங்கள் ஆகும்.

---

மளவு மக்கள் வவுனியா ரயில் நிலையத்தில் கூடி மேலதிக விபரங்களைப் பெற முண்டியடித்துள்ளனர். ரயில் குண்டு வெடிப்பு நிகழ்ந்த பெட்டி கழற்றி விடப்பட்ட நிலையில் ஏனைய பெட்டிகளுடன் வவுனியா ரயில் நிலையத்திற்கு காலை ஒன்பது மணியளவில் வந்து சேர்ந்துள்ளது.

---

க்கு உள்ளாக்கப்பட்டுள்ளார், கந்தையா மயில்வாகனம் (வயது 60), சத்தியபாலா (வயது 28) குமாரவேல் (வயது 36) ஆகியோரும் கால்களில் காயமடைந்து சிகிச்சைக்குஉட்படுத்தப்பட்டுள்ளனர்.

---

## க. பொ. த.

என ஏற்கனவே செய்தி வெளியானது தெரிந்ததே.

இது குறித்து பரீட்சை ஆணையாளர் ஆதர்வெத முல்ல நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் பின்வருமாறு தெரிவித்தார்.

முன்னர் திட்டமிட்டபடி பரீட்சையை நடாத்துவதால் பரீட்சார்த்திகளுக்கு எவ்வித இடையூறும் ஏற்படாது பரீட்சார்த்திகளுக்கு பெருமளவு வசதியீனத்தை ஏற்படுத்தும் என்ற காரணத்தினால் குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் பரீட்சையை நடாத்துவது சரியானது அல்ல அதேசமயத்தில் பரீட்சையை தாமதிப்பது பாடசாலைகளின் மூன்றாவது தவணை நடவடிக்கைகளை பெரிதும் பாதிக்கும் உயர் தரப் பரீட்சையை இரண்டு கட்டங்களாக நடத்துவது என்று தீர்மானம் மேற்கொள்கையில் இது குறித்த சகல விடயங்களும் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

பரீட்சை நடக்கும் அதே நேரத்தில் பொதுத் தேர்தலும் நடைபெற இருக்கிறது. இது குறித்து கல்வி அமைச்சு கவனம் செலுத்தும் பரீட்சை வேளையில் பரீட்சை நடைபெறும் நிலையங்களில் அதன் முன்னேற்றங்களைத் தடை செய்யக் கூடிய எந்தவித நடவடிக்கைகளும் இடம்பெறக் கூடாது என்பதை நிச்சயிக்கும்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கோரப்பட்டுள்ளனர் என்றார்.

இது குறித்து கல்வி ஆணையாளர் அரசியல் கட்சிகளுக்கும் சுயேட்சை குழுக்களுக்கும் விடுத்துள்ள வேண்டுகோளில் பரீட்சை முன்னேற்றம் தடைப்படாத விதத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் படி கோரியுள்ளார்.

## வவுனியா

விடுதலைப் புலிகள் போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

வீரச்சாவடைந்த கப்டன் எழில்வாணன் (கறுப்பையா சின்னக்குமார் ஸ்ரேசன் டி செட்டிக்குளம். தற்போதைய முகவரி: மடு) லெப்ரினன்ட் தேவன் (சாய ஆனந்தன் அன்ரனி தோமஸ், நகரசபை வீதி, குருமன்காடு வவுனியா) ஆகிய இரு போராளிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## இருதய

மயக்க மருந்து கொடுக்கத் தேவையில்லை. பாதிக்கப்பட்ட பகுதி மட்டும் மரத்துப் போகச் செய்யப்படுகிறது. கைபிலோ காலிலோ ஒரு ரத்தக் குழாய் மூலம் ஒரு நுண்ணிய கருவி உள்ளே அனுப்பப்படுகிறது. இக்கருவி இரத்தக்குழாய் வழியாக சென்று அங்குள்ள அடைப்பு தடை போன்றவற்றை அகற்றி விடுகிறது.

## வடமராட்சி

ந்தன. உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டதாக தகவலில்லை.

இக் குண்டு வீச்சு தாக்குதலுக்கு முன்னர் உலங்கு வானூர்தி ஒன்றும் அப்பகுதியை வட்டமிட்டு நோட்டமிட்டது. (யோ)

## இன்று

ளைத் தெரிவிக்கலாம். அதனைத்தொடர்ந்து வேட்பாளர் மனுப்பத்திரங்களின் தகைமை பற்றி தீர்மானிக்கப்படும் 1.30 ற்குப் பின்னர் சுயேட்சைக் குழுக்களுக்கான அடையாளங்களும், இலக்கங்களும்ஒதுக்கப்படவுள்ளன.

## துப்பாக்கி

யோகம்கேட்டது. அவ்வேளையில் காயமடைந்த நான் சரிந்து வீழ்ந்தேன். நிமிர்ந்து நடந்தால் மீண்டும் சூட்டிற்கு உள்ளாக வேண்டி வரும் என்று உணர்ந்த நான் சில நிமிட நேரம் தொடர்ந்து படுத்துக்கிடந்தேன்.

இராணுவத்தின் துப்பாக்கிப் பிரயோகம் சுமார் பத்து நிமிடங்கள் வரை நீடித்தது. நான் மெல்ல மெல்லமாகத் தவழ்ந்து காட்டிற்குள் புகுந்தேன்.

என்னால் சிராக நடக்க முடியவில்லை காட்டுப்பாதை வழியாக நீண்ட தூரம் சுற்றி எனது கிராமத்தைச் சென்றடைந்தேன்.

கிராமத்திற்கு சென்ற பின்னரும் என் கூட வந்த மீதி மூன்று பேர்களினது கதிபற்றி அறிய முடியவில்லை. சிறிது நேரம் கழித்து நான் வாகனம் ஒன்றில் யாழ். வைத்திய சாலைக்கு எடுத்து வரப்பட்டேன்என்றார். (தி, க, பா)

## இராஜினாமா

களை பிரயோகிப்பதை கண்டிப்பதாக கூறி இவர் பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

## சேமமடுவில்

ணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர்.

சிறிலங்கா இராணுவத்தின் இத் தாக்குதலில் கையில் பலமான காயங்களுக்குள்ளாகி யாழ். வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டு அவசர சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டிருக்கும் பேதுறு செல்வநாயகம் (38) என்பவரை தவிர, மீதி மூவரின் நிலை பற்றிய தகவல்கள் தெரியவரவில்லை.

மேற்குறிப்பிடப்பட்ட நபரைத் தவிர மற்றைய மூவரும் இராணுவத்தின் தாக்குதலின் பின்னர் சேமமடு பகுதிக்கு வந்தடையவில்லை என்றும் அம் மூவரும் இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டிற்கு பலியாகியிருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

அவர்களின் பெயர் வருமாறு; நா. செல்வராஜா (40), க. பெனாண்டோ (35), பேபி (48), இவர்கள் அனைவரும் சேமமடு 2ஆம் யூனிட்டைச் சேர்ந்தவர்களாகும்.

இதேவேளை நேற்று முன்தினம் தாண்டிக்குளம் இராணுவ சோதனை முகாமைத் தாண்டி, வடக்கு நோக்கி வெளியேறியதாகவும் கண்மூடித்தனமாக துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபட்டதாகவும் சில தீவைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டதாகவும்வவுனியாவிலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (தி,க,பா)

## நான்கு

கடந்த நாலாம் திகதி நடைபெற்ற மேற்படி சம்பவத்தின் போது பனிச்சங்கேணியைச்சேர்ந்தவர்களான செல்வம் துவாரகன் (வயது 25) சிவநாதன் நேசன் (வயது 21 நாகமணி கோகுலன் (வயது 10) சீனித்தம்பி குமார் (வயது 10) ஆகியோரேகைது செய்யப்பட்டவர்களாவர்.

இந் நான்கு பேரும் இதுவரை விடுதலை செய்யப்படவில்லை இவர்கள் பற்றிய தகவலை பெறுவதில் பெற்றோர் ஈடுபட்டுள்ளனர்

---

## புலிகளின் குரல்

## நிகழ்ச்சி நிரல்

**1994-07-11**

**திங்கள் இரவு**

8. 01 - தளிர்கள்
8. 20 - செய்திச்சரம்
8. 30 - செய்திகள்
8. 40 - தரிசனம் - ''பழம் பெரும் யோகாசன கலைஞர் சிதானந்த சரஸ்வதி யோகி அவர்களுடனான செவ்வி''

**1994-07-12**

**செவ்வாய் காலை**

07.02 - மாவீரவணக்கம்
7.15 - இன்றைய தாரகை
7.30 - செய்திகள்
7. 35 - பத்திரிகைச் செய்திகள்
7. 40 - தாயகப் பாடல்கள்

## 3-ம் ஆண்டு நினைவில்



அன்னையின் மடியில்:
01 - 04 - 1973

இனிய தமிழ்ஈழ மண்ணில்:
11 - 07 - 1991

### லெப். ஜெகன்
(சவரியர் மோகனதாஸ்).

சரித்திரச் சாளரத்தில்
சாதனை நாயகனாய்
சாய்த்துவிட்ட மோகனதாஸ்-உன்
உள்ளத்தின் உணர்வலைகள்
உதிர்ந்துவிடப் போவதில்லை-இங்கு
உதயமாகப் போகிறது
ஈழத்தின் இளம்பூவே
இலட்சிய இத நாவே
பொங்கும் புரட்சி வாழ்வில்-உனைநாம்
பூஜித்து நிற்போமே.

என்றும் உன் பிரிவால் வாடும்
அப்பா, அம்மா, தம்பி, தங்கை, உற்றார்,
உறவினர், உன் இனிய நண்பர்கள்.
மயிலிட்டி வடக்கு மோகனதாஸ் குடும்பத்தினர்.
(8762)

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



### கப்டன் அமுதினி
(சிவமதி சிவசுப்பிரமணியம்)
[முன்னாள் தென்மராட்சி, மன்னார் மாவட்ட மகளிர் முன்னணிப் பொறுப்பாளர்]

தாயின் மடியில்
26.05.1968

ஆனையிறவுச் சமரில்
11.07.1991

உன்னை பிரிந்த
நிமிஷங்கள்
யுகங்களாக நகர்கின்றன
மெதுவாய் ..
மிக-மெதுவாய்
உன் ஞாபகம் ஆக்கிரமிக்கும்!
தேச விடுதலைக்காக
உயிர்த் திய கம்
செய்தவளே...
நாளை விடியலின்போது
உன் பெயர் பேசப்படும்.

தமிழீழ மீட்புப்போரில் வீரச்சாவடைந்த போராளிகள், இன அழிப்புக்கு உள்ளாகிய பொதுமக்கள் அனைவருக்கும் எமது அஞ்சலிகள்.

'ஞானகிரி'
உரும்பிராய், கிழக்கு,
உரும்பிராய்.
- குடும்பத்தினர்
(9901)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



அமரர்
### பேராசிரியர் அழகையா துரைராசா
(தலைவர், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி பழைய மாணவர் சங்கம்.)

நிறைந்த நன் மனத்தால்
நேர்வழி காட்டினாய்
கல்வியில் பெரியனாய்
ஆற்றல்மிகு விஞ்ஞானியாய்
அன்புடைத் தலைவனாய்
வாழ்ந்தவர் ....இன்றோ!...
காவியமாய், நெஞ்சில்
ஓவியமாய் ஆனவரே
சென்று வர விடை யீந்தோம்
நாயகனே போய் வாரும்!

அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சபையினர்.

யாழ். உடுப்பிட்டி அமெரிகன் மிஷன் கல்லூரி, வல்வெட்டித்துறை.
11-07-1994
(8772)

## 3-ம்ஆண்டுநினைவலைகள்



### வீரவேங்கை கோமதி
(கனகலிங்கம் சுடர்ஒளி)
அராலியூர்

தாயின் மடியில்: 10-2-71 தாயகமண்ணில்: 11-7-91

தாயின் மடியில் பிறந்து தாய் மண்ணிற்காக

## 4ஆம ஆண்டு நினைவலைகள்



### 2ஆம் லெப். சாளினி
[நவநீலவதனா அருமைச்சந்திரன்]

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையறுக்கப்பட்டது)
சுன்னாகம்.

### மறுசீர் அமைக்கப்பட்ட (RECONDITION ENGINE) லொறி என்ஜின் கொள்வனவுக்கான அறிவித்தல்

சுன்னாகம் பல நோ. கூ. சங்கத்தின் பாவனையிலுள்ள பின்வரும் லொறிகளுக்கு மறுசீர் அமைக்கப்பட்ட என்ஜின் பொருத்த வேண்டியிருப்பதால் குறித்த என்ஜினை விற்பனைக்கு வைத்திருப்போர், சங்கத்துடன் தொடர்பு கொண்டு கேள்விப்பத்திரங்களைச் சங்கத் தலைமைப் பணிமனையில் பெற்று, விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

1) பி எம். சி. லொறி - B M C MORRIS
2) லங்கா அசோக் லேலன்ட் லொறி - LANKA ASHOK LEYLAND

### கலந்துரையாடல்

(கொழும்புத்துறை)

நல்லூர் அருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளதால் திருவிழாவிற்கான ஏற்பாடுகள் குறித்து பூர்வாங்க ஒழுங்குகள் சம்பந்தமான முடிவுகள் எடுப்பதற்கு யாழ் மாநகராட்சி மன்ற ஆணையாளர் பணிமனையில் இன்று பி. ப. 3. 00 மணிக்கு யாழ் மாநகராட்சி மன்ற ஆணையாளர் திரு வே. பொ பாலசிங்கம் தலைமையில் ஓர் கலந்துரையாடல் நடைபெறும். (24)

### இளம் பெண்களிடம் சங்கிலித் திருட்டு

(வடமராட்சி)

வல்லிபுரக் கோவிலுக்கு வழிபாட்டுக்குச் சென்ற மூன்று இளம் பெண்களிடம் ஆனைவிழுந்தானில் வைத்து இனம் தெரியாதவர்களினால் சங்கிலித் திருட்டுச் சம்பவம் ஒன்று நேற்றுக் காலை 5.00 மணியளவில் நடந்தது.

துவிச்சக்கர வண்டிகளில் சென்ற மேற்படி யுவதிகளிடம் இனம் தெரியாத கோஷ்டி ஒன்று கத்திமுனையில் பெறுமதி வாய்ந்த சங்கிலிகளைப்பறித்துக்கொண்டு மறைந்தனர். இனம் தெரியாத கோஷ்டியினர் அப்பகுதியில் உள்ள பற்றை ஒன்றில் மறைந்திருந்து இத் திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்டதாகத் தெரியவருகிறது. (யோ)

### எறிகணைவீச்சு

(தொல்புரம்)

காரைநகரில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா ஆயுதப் படையினர் தமது காவல் நிலைகளிலிருந்து நேற்று முன் தினம் இரவு 7. 40 மணியளவில் பொன்னாலை, மூளாய்ப் பகுதிகளை நோக்கி பலத்த எறிகணை வீச்சினை மேற்கொண்டனர். இவ் எறிகணைகள் மேற்படி பகுதிகளில் வீழ்ந்து வெடித்தபோதிலும் பொருட் சேதங்களோ, உயிர்ச் சேதமோ எதுவும் ஏற்படவில்லை எனத் தெரியவருகிறது. (41)

### இன்று
11-07-94

அராலியூர்

தாயின் மடியில்: 10-2-71 தாயகமண்ணில்: 11-7-91

தாயின் மடியில் பிறந்து தாய் மண்ணிற்காக வளர்ந்து தாயக மண்ணிற்காகவே உன் உயிர் கொடுத்து தமிழீழ மாவீரரானாய் தங்கத் தமிழ் வாழு மட்டும் நீயும் வாழுவாயம்மா.

இதே தினத்தில் வீரச்சாவு அடைந்த ஏனைய போராளிகளையும் நினைவு கூருகின்றோம்.

ஜெயகுமார் லேன்,
பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

(8767)

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



### லெப். சுரேன்

(தெய்வேந்திரம்சுந்தரமூர்த்தி)

(திருமலை)

பிறப்பு 15-05-1972

வீரச்சாவு 11-07-1991

இன்று எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசன விருந்தில் போராளிகள் மற்றும் நண்பர்கள் யாவரையும் கலந்து கொள்ளும்படி அன்புடன் அழைக்கிறோம்.

மீசாலை, வடக்கு,
கொடிகாமம்.

குடும்பத்தினர்.

(சி-8773)

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994ஆம் ஆண்டு ஜூலை மாதம் 11ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

### 2ஆம் லெப். சாளினி

[நவநீலவதனா அருணாச்சந்திரன்]

வல்வெட்டித்துறை

ஜனனம்: 17-07-1972

வீரச்சாவு: 14-07-1990

தேசத்தின் ஒளிர்விற்காய்
தென்றலாய் வீசி
நாசத்தின் வேர்களை
நாற்திசையும் களைந்து
வாசத்தின் வடிவமாய் - நீ
வானகம் சென்றாலும்
பாசத்தின் இதயங்கள் - உன்னை
பார்க்கத் துடிக்கிறது.

- குடும்பத்தினர்

(சி-9797)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 24 - 03 - 1918

மறைவு: 11 - 06 - 1994

### திருமதி இராசதுரை பத்மாவதி

விழிநீர் பெருகி ஆறெனவே ஓடும்
வாட்டும் சோகமதோ வான்வரை உயரும்
அன்னையே! உன் இழப்பை
ஈடுசெய்யும் வழி அறியாது
இன்னும் நாம் வாடுகின்றோம்!

24/1, விதானையார் வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

(சி-9798)

1) பி எம். சி. லொறி - B M C MORRIS
2) லங்கா அசோக் லேலன்ட் லொறி - LANKA ASHOK LEYLAND

கேள்விப்பத்திரங்கள் 20. 07. 94 வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

பொது முகாமையாளர்

சுன்னாகம் பல. நோ. கூ. சங்கம்,
சுன்னாகம்.
08. 07. 94

(சி-9793)

இதோ ஓர் அதிரடிச் செய்தி

ஜோ. எகட்டனின்

ஜெசித்தாரா வழங்கும்

தோழமையுள்ள வெகுமதி
காவிச் செல்லும் உணவுப் பொட்டலங்கள்
07-07-94 முதல்
ரூபா 27.50 மட்டுமே.
இறைச்சி / மீன் / மரக்கறி
எதுவானாலும்
பகல் 11.45 முதல் பிற்பகல் 3.45 வரை
எமது இனிய வாடிக்கையாளருக்கு ஓர் மின்னல் அதிரடி
ஜோ. எகட்டனின்
ஜெசித்தாரா
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
முன் ஒழுங்கை,
சுண்டுக்குளி.
உணவுத் தயாரிப்பில் அபார சாதனை
ஜெசித்தாரா
எமக்கு வேறு எங்கும் கிளைகள் இல்லை.

(சி-9776)

அமரர் பேராசிரியர் அ. துரைராசாவின்

## 31-ம் நாள் நினைவஞ்சலி

எங்கள் உளம் நிறைந்த ஏந்தலே
நீங்கள்
எவ்வுலகு சென்றாலும் எம்மை
மறந்தாலும்
உங்களை நாங்கள் ஒரு
பொழுதும் மறந்திடோம்.

ச. க. தனேந்திரன்
தலைவர்
யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம்

(சி-9902)

இன்று
11-07-94
முற்பகல் 1 மணிக்கு
மங்களகரமான
திறப்பு விழா

குளிரருவி

சுவையான
★ குளிர்களி வகைகள்
★ குளிர்பானங்கள்
அருந்தி மகிழ்ந்திட
குளிரருவி
157, இராசன் சாலை
யாழ்ப்பாணம்.

(சி-9796)

யாழ். ஸ்ரீதரில்
தினசரி 4.00
மணிக் காட்சியாக

உயிராயுதம்

தினசரி 6.00 சனி, ஞாயிறு 10.30, 6.00
மணி காட்சியாக

JURASSIC PARK

இன்று மட்டும்
2.30 மணி
காட்சியாக

மே '94 ஒளிவீச்சு

(சி-9786)